
www.tamilarangam.net

Raya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-SEINE, FRANCE



Tamilische Zeitschrift des Südasienbüros 48

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுக்கு நாட்டுப்பற்று இருக்கிறதா?

நீங்கள் எதற்காக எழுதுகிறீர்களோ புரியவில்லை !

கலம் 45 படித்தேன். புலிகளை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதும் தெரிகிறது. அதேநேரத்தில் புலிகளை மட்டும் எதிர்த்தால் உங்களை EP என்று சொல்லிவிடுவார்களோ என்ற பயமும் தெரிகிறது.

அதென்ன! ஒரே இந்திய எதிர்ப்புப் பிரச்சாரம்! அதில் மாத்திரம் புலிகளும், நீங்களும் ஒரே மாதிரி நடந்துகொள்ள முடிவதன் மர்மம் என்ன? இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை நாடுகடத்த வேண்டும் என்ற தமிழ்நாட்டு அரசின் முடிவை ஏன் எதிர்க்கிறீர்கள்? யாராவது "ஆக்கிரமிப்புச்" செய்த நாட்டில், எங்கள் பெண்களின் "மானம்" அழித்தவர்களின் நாட்டில் தொடர்ந்தும் அகதியாக இருக்க விரும்புவார்களா? இது என்ன நம்பிக்கையோ? இந்தியாவிலுள்ள எங்கள் "பெண்களின்" மானம் காப்பாற்றப்படும் என்று நம்புகிறீர்களோ அல்லது அப்பிடிச் செய்வது தான் இலங்கைத் தமிழர்களுக்கு நன்மையானது என்று கூறுகிறீர்களோ?

தமிழர்கள் சிங்களப் பேரினவாதிகளுடனும், இந்திய ஆக்கிரமிப்புவாதிகளுடனும்தான் போராடுகிறார்கள் என்று கூறும் "புதிய ஜனநாயகம்", "தூண்டில்" என்பவற்றில் மக்கள் இடம்பெயர்வது தமிழ்ப்பகுதிகளில் இருக்கமுடியாது என்பதனால்தான் என்பதும், தமிழ்ப் போராளிகள் (பயங்கரவாதிகள் என்றும் அழைக்கலாம்) செய்யும் அட்டகாசங்களினால்தான் உயிரைக்

→

www.tamilarangam.net

# பாவ்லா காட்டுகிறீர்களா?

## புரிய மறுத்தால் விரைவில் புரியும்!

கையில் பிடித்துக்கொண்டு "ஆக்கிரமிப்பு" நாட்டுக்கும், "பேரினவாத" தலைநகருக்கும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் ஏன்தான் இது வரை குறிப்பிடப்படவில்லை?

மக்களின் உண்மையான மனத்தை உங்கள் பத்திரிகை பிரசுரித்தாக தெரியவில்லை. ஏதோ தீவிரவாதச் சிந்தனை என்று காலனியாதிக்க நாடுகள் செய்யும் இந்தியாவுக்கு எதிரான பிரச்சாரத்தை நீங்களும் (புலிகளும் உங்களுடன் ஒத்துப் போகிறார்கள்) செய்வதன் மர்மம்தான் என்ன?

எங்கள் தென்கிழக்கு ஆசியாப் பிரதேசத்தில் (ஆங்கிலேயர்கள் இப்படிக் கூறுகிறார்கள்) அல்லது இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட மேற்கு நாடுகள் நடாத்தும் "கூத்துக்கள்" அல்லது பழைய காலனியாதிக்கத்தை புதிய வழிகளில் (கவனிக்க புஷ்ஷின் புதிய உலகத் திட்டம்! இது உண்மையில் புதிய காலனித்துவத்தை) நிலை நிறுத்தச் செய்வதை உங்களால் புரியமுடியாதுள்ளதா? அந்த நாடகத்தில் "இந்தியா"தான் பிரதான இலக்கு என்பது உங்கள் அபிமான "புதிய ஜனநாயகத்திற்கும்" உங்களுக்கும் ஏன் தான் தெரியவில்லை? அல்லது தெரியாத மாதிரி ஒரு "பாவ்லா" காட்டுகிறீர்களா?

ஒரு உதாரணம், புலிகளின் கிளைகள், தலைமைக் காரியாலயம் (இலண்டன்) என்பன இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளில்தான்

www.tamilarangam.net

உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். புலிகள் ஜனநாயக விரோத மாபியாக் கூட்டம் என்பதும் சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு நன்கு புரியும். புலிகள் பாவிக்கும் ஆயுதங்கள் எல்லாம் அமெரிக்க, இஸ்ரேலிய, ஜேர்மானிய தயாரிப்புகள் என்பது தெரியாதா? புலிகள் சுன்னாகம் சந்தையில் கத்தரிக்காய் வாங்குவதுபோல் ஆயுதம் எதையும் இந்த நாடுகளில் வாங்க முடியுமா? சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசியல் தலைமைகள் ஒத்துழைத்தால்தான் இது சாத்தியம். இப்போது புரிகிறதா? புலிகள் "வீரர்களாக" விளங்கும் மர்மம்!.

புலிகளுக்கு காரியாலயம் அமைக்கவிட்ட இங்கிலாந்து அரசு இதுவரை எத்தனை இலங்கைத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது? ஆக, 10 அல்லது 20 பேர்தான் இங்கிலாந்தில் அகதி அந்தஸ்து பெற்றவர்கள். ஆயுத வியாபாரம், அரசியல் வியாபாரம் செய்ய புலிகளின் ஹை கொமிஷன் போதும்தானே. புறோக்கர் அன்ரன் பாலசிங்கம், அவரது மனைவி இவர்கள் போதும்தானே? அகதிகளை யார்தான் கட்டியழுவது? ஊரில் இருந்து மண்டையைப் போட்டால் அது கூட இவர்களின் பிரச்சாரத்திற்கு உபயோகமாக இருக்கும். (ஜனநாயகம் பற்றி நிறையத் தமாஷ் விடும் நாடு) சிங்களம், தமிழ் என்று நாங்கள் சின்டைப் பிடித்துக்கொண்டு இன்று பஞ்சைப் பராரிகளாக அலைவது இந்த ஜனநாயக இங்கிலாந்து 160 ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் நாட்டில் பேணிய "ஜனநாயக" மரபினால்தான் என்பது உங்களுக்கு மறந்து போனதோ?

இந்தியாவில் இருந்து கொண்டு வந்த தொன் கணக்கான தங்கம், யானைக்கொம்பு, மிளகு இவற்றை எப்படித்தான் மறந்து தொலைப்பது? இந்தியாவை இழந்தபடியால் தான் இலங்கையும் "சுதந்திரம்" பெற்றது. தமிழர்கள் வெள்ளையர்கள் போய்ச் சேர்ந்தபோது எவ்வளவு கவலைப்பட்டார்கள்? இந்த வெள்ளைக்கார எசமான விசுவாசம்தான் தான் பிறந்த மண்ணை மிதிக்கவிடாமல் செய்தது என்பது புரிந்திருக்கும் என எண்ணுகின்றேன்.

அது சரி! சீக்கிய மக்களுக்கும், அஸாம் மக்களுக்கும் சேர்த்து ஒப்பாரி வைத்திருக்கிறீர்களே! இலங்கையில் மலைநாட்டு இந்தியத் தமிழர்களை யாழ்ப்பாணிகள் கூலி வேலைக்கும், மலாயன் கபேயில் விறகு கொத்தவும், கிளிநொச்சிக் காணிகளில் மலிவான கூலியில் இருத்தியும் அடிமைகளாக நடாத்திய யாழ்ப்பாணத்து வாரிசுகள் இன்று அஸாம், பஞ்சாப் மக்களுக்கு கண்ணீர் வடிவதாக வெட்கம் கெட்டுக் கூறுகிறீர்களே? மலைநாட்டில் எஸ்றேற் பாடசாலைகளில்

www.tamilarangam.net

"வாத்தி" வேலை பார்த்தது யாழ்ப் பாணத்து இன்றைய தமிழ் வீர புருஷர்களின் அப்பா, அம்மா, மாமா, மாமி, சித்தப்பா, சித்தி மார்தானே. அவர்கள் பெற்ற "கல்வியறிவு"? ஆகா! நினைத்தாலே மெய் சிலிர்க்கிறதே! யாழ்ப்பாணத்தில் ஒரு வேலையும் கிடைக்காது "தோட்டக் காட்டு" பாடசாலைகளில் வாத்தியாராக மாறி யாழ்ப்பாணத்து உப்புச் சுவர் மண்ணில் கட்டிய மாடகூட கோபுரங்கள்தான் எத்தனை? அறுபது ரூபா சம்பள "தோட்டக்காட்டு" வாத்தியார் நூறு ரூபா செலவில் தன் பிள்ளையை சென் ஜோன்ஸிலும், சென்றலிலும் படிக்கவிட்ட மர்மம் என்ன?

இந்திய மக்களுக்கு மலைநாடு வாழவைக்கும் தோட்டக்காடு. யாழ்ப்பாணிகளுக்கு அது வேட்டைக்காடு.

இந்தளவு அநாகரிகமாக நடந்த-நடந்துகொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களையும், அவர்களது யாழ்ப்பாணத் தலைமைகளையும் இந்தியா துரத்த நினைப்பது என்ன மாதிரியான துரோகம்? "புதிய ஜனனாயகம்" சரி, "தூண்டில்" சரி இந்த உண்மைகளைக் கூறத் தயார் இல்லை. ஏனோ?

ஜேர்மனியில் இன்று வெளி நாட்டவர்களுக்கு நடைபெறும் "உதை"க்கு என்ன காரணம்? அங்கெல்லாம் ஏன் ஊர்வலம் போக புலிகள் உட்பட முற்படுகிறீர்கள். பேசாமல் புலிகளிடம் கூறி ஹெல்முட் கோலுக்கும் ஒரு குண்டை வைத்துத் தொலைக்க வேண்டியது தானே? எந்த இலங்கையனும் அழப்போவதில்லை. இலங்கையில் தமிழர்களால் கொலையாகிப் போகும் தமிழர்களைப் பற்றி இலங்கைத் தமிழர்களே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. வெளிநாட்டவர் யாராவது உங்களுக்காக வந்து அழவேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா?

சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற அமைப்புகள் இலங்கையில் என்ன செய்கின்றன? இவை மேற்கு நாடுகளின் பணத்தில் இயங்குபவையே. யாழ்ப்பாணத்தில் புலிகள் செய்யும் கொலைகளையும், கடத்தல்களையம், மனிதாபிமான மீறல்களையும் மறைத்து புலிகளின் சார்பாக அறிக்கை சமர்ப்பிக்கின்றன. உ-ம்: "ஈழ முரசு" பத்திரிகையை 1987 ஜனவரியில் புலிகள் பிடுங்கியது பற்றியோ 1990இல் அதன் அதிபர் மயில்.அமிர்தலிங்கம் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதோ, சண்முகலிங்கம் போன்ற பிரதான நிருபர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதோ (தூண்டிலில் குறிப்பிட்டது தவிர, சண்முகலிங்கம் உயிருடன் இல்லை. புலிகளே அவர்களின் வீட்டுக்குச் சென்று தாங்கள்தான் கொன்றோம் என்று கூறியுள்ளனர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

சர்வதேச மன்னிப்புச் சபைக்கு ஏன் தெரியாமல் போனது? ஆனால் "புலிகளின்" கோயபல்ஸ் எஸ்.திருச்செல்வத்தின் மகன் கொல்லப்பட்டது ச.ம.சபைக்கு முக்கியமான செய்தி. மனித உரிமை மீறலை E.P.R.L.F செய்துவிட்டதாக அறிக்கை. மேற்கு நாடுகள் திருட்டுத்தனமாகப் புரியும் ஆயுத வியாபாரங்கள், பலாத்கார நடவடிக்கைகள் இது போன்ற நிறுவனங்கள் மூலமாகத்தான் கண்காணிக்கப்படுகின்றன.

பாருங்கள், சென்ற ஆண்டு இலங்கையில் 60,000 பேர் காணாமற் போயுள்ளார்கள் என்று இதே ச.ம. சபை அறிக்கை கொடுத்தவுடன் இலங்கை கேட்ட 813 மில்லியன் கடனுக்குப் பதிலாக இந்த மேற்கு நாடுகள் 1000 மில்லியன் வாரிவழங்கின. இலங்கை அரசுக்கு முண்டு கொடுப்பது இந்த ஜனனாயகநாடுகள் என்றழைக்கப்படும் இந்த நாடுகள்தான் என்பது எப்போதுதான் எமது "படித்த" ஆங்கில அடிமைகளுக்குப் புரியும்.

ராஜீவ்காந்தி கொலையின் பின் இந்தியா மேற்கு நாடுகளிடம் பெற்ற கடன்கள், மேற்கு நாடுகளின் சுரண்டல் கம்பெனிகள் இந்தியாவில் முகாமிட வசதி உண்டு பண்ணப்பட்டுள்ளது. இந்த இலாபத்தில் ஒரு சிறு பகுதி புலிகளுக்கு "கூலியாக" கொடுக்கப் போதுமானது.

எங்கள் பிராந்தியத்தில் மேற்கு நாடுகள் சுரண்ட வழிவிடும் நாடுகள் பற்றி யாரும் மூச்சு விடுவதில்லை. ச.ம.சபை அறிக்கைகள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. உ-ம்: பாகிஸ்தான், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா போன்றன. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் சகல ஸ்கன்டநேவிய நாடுகளும் தங்களுக்கு எங்கள் பிராந்திய நாடுகளில் சுரண்டவிடாத ஆட்சி வந்தவுடன் மனித உரிமை பற்றி ஊளையிடத் தொடங்குவார்கள். செய்தித் தொடர்புச் சாதனங்கள் இந்த நாடுகளில் அரசு கட்டுப்பாட்டில் இல்லாதவை. தனிப்பட்ட மனிதர்களின் ஆதிக்கத்தில் உள்ளவை. ஆதாயமான செய்திகளை வெளியிட்டும், தங்கள் இலாபங்களுக்குப் பாதகமான செய்திகளை இருட்டடிப்புச் செய்தும் இந்தத் தனிமனித வியாபாரிகள் நடந்துகொள்வர். இவர்கள்தான் மனித உரிமை பற்றி குரைப்பவர்கள். சமீபத்தில் சீனா சென்ற பிரிட்டனின் பிரதமர் ஜோன் மேஜர் மனித உரிமை மீறல்கள் பற்றி வாய் திறந்தவுடன், அவர்கள் பிரிட்டனின் காலனியாதிக்கக் காலம் பற்றி நாங்களும் பேசுவோம் என்று சீனத் தலைவர்கள் கூற அந்த விடயத்தை மெல்ல கழட்டிக்கொண்டார். கனடிய அமைச்சர் ஒருவருக்கு மனித உரிமைகள் பற்றி சீனா புத்தகம் ஒன்றை அனுப்புவதாகக் கூறியதும் வாயைத் திறக்காது வியாபார விடயங்களைப் பேசிவிட்டு நாடு திரும்பினாராம். எனவே மேற்குநாடுகளின் மனித உரிமைகள் பற்றிய விமர்சனங்களை நாம் கவனிக்கத் தேவையில்லை.

அமெரிக்க C.I.A ஆண்டுக்கு 30 பில்லியன் டொலர் பட்ஜெட்டில் இயங்குவதாகத் தகவல். எத்தனை மூன்றாம் உலகநாடுகளில் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்படவும், நாடுகள் தங்கள் சொத்துக்களை இழந்தும் தவிக்க காரணமாகிறது என்பது புரியுமா? 98% அமெரிக்கர்களுக்கு C.I.A என்ன செய்கிறதென்றே தெரியாது. அவர்கள் கேட்கவும் முடியாது. ஈரான் கேற் போல் சமாச்சாரங்கள் வெளிவந்தால் பணக்காரப் பத்திரிகைகள் அவற்றை போட்டி போட்டு பிரசுரித்து உண்மைகளை திரித்தும் திசை திருப்பி விடுவார்கள். கடைசியாக "எல்லாம் அமெரிக்காவின் நன்மைக்காக" செய்யப்பட்டது என்று கதை முடிக்கப்பட்டும் சம்பந்தப்பட்டவர்கள் புத்தகங்கள் எழுதி சில மில்லியன்கள் சம்பாதிப்பார்கள். அவ்வளவுதான்.

அமெரிக்காவில் நடைபெறும் கொலைகள் அளவிற்கு உலகில் எந்த நாட்டிலும் நடைபெறுவது கிடையாது. இதுதான் அமெரிக்க ஜனநாயகம். இவர்கள் இந்தியா பற்றியும், ஜனநாயக உரிமைகள் பற்றியும் ஊளையிடுவது ஏன் என்பது எங்களுக்குப் புரியும். இவர்களை "கடை" திறக்கவிடாத இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி போன்றவர்கள் கொல்லப்பட்டதும் பின்

www.tamilarangam.net

ணர் அங்கு நடைபெறும் பொருளாதார கொள்கை மற்றவர்களையும் கவனிப்பது நல்லது.

பாருங்கள் முன்னர் போலந்து பற்றியும், கொம்யூனிஸ்ட் ஆட்சி பற்றியும் அலறிய இந்த மேற்கு நாட்டு ஊதுகுழல்கள் இன்று மௌனமாகியுள்ளன. லேக் வலென்ஸா பற்றி மூச்சுக்கு மூச்சு புகழ் பாடியவர்கள் இன்று மௌனமாகியதேன்? அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் கடனும் வேண்டாம், உங்கள் ஆலோசனையும் வேண்டாம் என்று கூறி வலென்ஸா ஓட்டம் பிடித்து விட்டார். பிச்சை வேண்டாம், நாயைப் பிடிதான். எங்கள் பிரதேசங்களில் நாய்கள் புகுந்து இராச்சியம் செய்கின்றன. வலெஸாவை இவ்வளவு காலமும் புகழ்ந்து தள்ளிய வாயால் திடீரென்று அலறினால் போலந்துக்காரர்களிடம் எடுபடாது என்பது தெரியும். பொறுத்திருக்கிறார்கள். விரைவில் வலேஸாவும் மனித உரிமை மீறுகிறார் என்ற செய்தி வரும்.

மேற்கு நாடுகள் ஒன்றும் புத்தர்கள் அல்ல. நூற்றுக்கணக்கான வருடங்களாக கீழைத் தேசங்களில் சுரண்டிக் கொழுத்த நாடுகள் அதன் காரணமாக இவர்கள் கண்டுபிடித்த தொழில் நுட்பங்கள் ஏராளம். துப்பாக்கி உற்பத்தி செய்வதும், விற்பனை செய்வதும் இதே "மேற்கு நாட்டு" ஆசாமிகள்தான்., கொலை செய்யும் டெக்னிக்குகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் இந்த வெள்ளையர்கள் "சமாதானம்", "மனித உரிமை" என்று புலம்புவது எத்தனை கபடத்தனம்.

ஈராக்கிற்கு ஆயுத விற்பனை ஜேர்மனியும், பிரான்சும்தான். இதேநாடுகள் பின்னர் எத்தனை நம்பிக்கை துரோகம் இழைத்தார்கள்?

எனவே எங்கள் நாடும், கலை கலாச்சாரமும் இந்தியாவுடன் இணைந்ததென்பதும் இந்தியாவுடன் நட்பாக இருப்பது நட்டம் தரும் விடயமல்ல. ஸ்ரீமாவோ இந்தியாவுடன் நட்பாக இருந்தார். இந்தியா இலங்கை விவகாரங்களில் தலையிடவில்லை. UNP மேற்கு நாடுகளின் ஏஜெண்ட் அரசு. தமிழ் குழுக்களை இந்தியா ஆதரிக்கப் போதுமான காரணம் உண்டு. அமெரிக்க, பிரித்தானிய அடிவருடிகள் எங்கள் நாட்டில் ஆட்சி நடாத்த முடியாது.

கடைசி அரசனான கண்ணுச்சாமி என்ற தெலுங்கு விக்கிரமராசசிங்கன் முடியிழந்தவுடன் சிங்களப் பிரதானிகளும், பௌத்த குருமாரும் இன்னொரு நாயக்க இளவரசனைத் தேடி இந்தியாதான் போனார்கள். எனவே சிங்களவர்களும், தமிழர்களும் சகல விதங்களிலும்

www.tamilarangam.net

இந்தியாவுடன் பிணைக்கப்பட்டுள்ளோம் என்பதை மறக்க வேண்டாம். கூறைக்குக் காஞ்சிபுரம் வேண்டும் என்று அலறும் யாழ்ப்பாணிகள் வெள்ளவத்தை சீலையை கட்டுவார்களா?

பாராளுமன்றத்தில் E.P.R.L.F பிரேமச்சந்திரன் கூறியது உங்களுக்கு நகைச்சுவை. செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக பேச்சுவார்த்தை - அன்ரன் பாலசிங்கம்!. நோர்வே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி!. அவுஸ்திரேலியா இலங்கையில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை!. இந்த செய்திகள் உங்களுக்கு எப்படி இருக்கின்றன? நகைச்சுவையாக உள்ளதா? அல்லது ஆகா உண்மையான சமாதானம் வரப்போகிறது என்று நம்பிக்கை பிறக்கிறதோ?

எங்களுக்கு உடம்பு எரிகிறது. பழைய எசமானர்கள் மீண்டும் பிரவேசம். நாட்டுப்பற்று உள்ள எவனும் பொறுத்துக்கொள்ள மாட்டான். உங்களுக்கும் அது இருக்கிறதா?

நீங்கள் குறிப்பிடும் தென்னாசிய நிறுவனத்திற்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? புதிய ஜனனாயகத்திற்கு சில "கிறிஸ்தவ பாதிரிகள்" கூட்டத்துடன் உள்ள தொடர்பு உங்களுக்குப் புரியுமா?

கிறிஸ்தவ பீடங்கள் எங்கள் நாடுகளில் ஐந்தாம்படைகளாகத்தான் இயங்குகின்றன என்பது எங்களுக்குத் தெரியும். இலங்கையில் சிங்கள கத்தோலிக்க பீடம் UNPயையும் தமிழ் கத்தோலிக்க பீடம் புலிகளையும் ஆதரிக்கின்றன. ஒரே எசமானர்களுக்காக உழைக்கிறார்கள்.

உ-ம்: E.P.R.L.F பிடித்த CIA தம்பதிகளை தியோகுப்பிள்ளை சாமியார் பாரம் எடுத்துக்கொண்ட புண்ணிய காரியத்தை நினைவுகூர்வது நல்லது.

நீங்கள் எதற்காக எழுதுகிறீர்களோ புரியவில்லை. புலிகளும், பிரேமதாசா அரசும் நண்பர்கள் என்பது தெரியும். அப்படியானால் ஏன் சண்டை என்று கேட்பீர்கள்? புலியும், பிரேமதாசாவும்தான் மிஞ்ச முடிகிறது. இதுதான் சூத்திரம். சில நூறு தமிழ், சிங்கள இளைஞர்கள், சாதாரண உழைப்பாளிகள் கொல்லப்படுவது பிரேமதாசாவின் நிரந்தர இருப்புக்கு வழிசெய்கிறது. அவ்வப்போது புலிகளை அடக்க முயல்வதாக பிரேமதாசா ஒரு நடிப்பு. மாங்குளம் காம்ப் கைப்பற்றல், ஆனையிறவுப் போர் என்று புலிகள் ஒரு வீர முழக்கம். எப்படி தமாஷ்? இரு கோஷ்டிகளின் இருப்புக்கும் இந்தச் சண்டித்தனம் அவசியம். இந்தச் சக்கத்தில் ஜனனாயகம் , மனித உரிமை,

www.tamilarangam.net

உண்மை, நேர்மை கேட்கும் அசட்டு ஆத்மாக்களை பங்கர் வெட்டச் செய்யலாம். விட்டால் தகராறு என்று நினைத்தால் சமாதி ஆக்கி விடலாம்.

அது சரி, அன்ரன் பாலசிங்கம் என்ன அனுமாரா பாங்கொக்கிற்கும், லண்டனுக்கும் பறந்து திரிய? இவர் எப்படி அங்கும் இங்கும் பயணம் செய்கிறார்? இந்த ஆசாமியை பற்றிச் சிறிது அக்கறை எடுங்கள். இவர் கொழும்பு மூலம்தான் பயணம் செய்கிறார் என்பதும், பிரேமதாசாவுடன் மகா ஐக்கியம் என்பதும் புரியும்.

சாதாரண புலி உறுப்பினர் பயங்கரவாதி. சாதாரண சிங்கள இராணுவ வீரன் அடக்குமுறை அம்சம்.

கொத்தலாவலை ஒரு உண்மை வீரன் - கிட்டு புகழாரம்.

பிரேமதாசா ஒரு கண்ணியவான் — அன்ரன் பாலசிங்கம்


எப்படி இந்தக் கூத்து? புரிந்தால் சரி. புரிய மறுத்தால் நாங்கள் என்ன செய்வது? விரைவில் புரியும்.

- யோ. வின்சன்ட்


✳

*இக் கட்டுரை பற்றி நாங்கள் 4ஆம் பக்கத்தில்...!*

*- கடலோடிகள்*



"காலனித்துவம்"



"நவ காலனித்துவம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

✳✳ # இப்னு அஸூமத்தின் கவிதைகள் ✳✳

0 ஆசை 0

பூக்கத்தான் பூவுக்காசை
தண்டுக்குப்
பிரசவ வேதனை

✳

0 சுதந்திரம் 0

கை வீசம்மா
கை வீசு...
சுதந்திரம் வாங்கலாம்
கை வீசு...
சுடுகாடு போகலாம்
கை வீசு...

✳

0 தேடல் 0

காணாமல் போனவள்
திரும்பக் கிடைத்தபோது
தேடினோம் அவளது
கற்பை!

✳

0 கட்சி 0

கட்சிகளில்
அவர்கள் இருந்தார்கள்.
அவர்களில்தான்
கட்சி
இல்லாமற் போயிற்று.

✳

0 இங்கே 0

சகோதரனை
அடித்தது குறித்து
சந்தோஷப்பட்டு
கை தட்டிவிட்டு
திரும்பிப் பார்த்தார்கள்...

அவர்களது
கைகளே அவர்களை
கைது செய்கின்றன.

✳

(இப்னு அஸூமத்தின் 'ராத்ரி' கவிதைத் தொகுப்பிலிருந்து நன்றியுடன் மறுபிரசுரம்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



** 2 உலகம்! **

அடுத்த வருடமாவது
கலண்டரில்
விடிந்துவிட்டது என்று
குறிப்பு வராதா?

அழிப்பா?
தடுப்பா?
எல்லாமே உங்களுக்கு
வெறும்
விடுப்பாய் போய்விட்டதுதானே.

என்ன செய்வதாய் உத்தேசம்?

ஆயுதங்களால் குறிபார்க்கப்பட்டு அழிவதா?
ஆயுதங்களைத் தூக்கி அழிவதா?
தேடுகின்ற பதிலாய்
இன்னமும் நாங்கள்.
நீங்களோ
கேள்விகளுடன்
பதில் பற்றிய பிரக்ஞையற்று.

www.tamilarangam.net

உங்கள் குறிக்கோள்கள்
போற்றுதற்குரியன.
என்ன செய்ய?
எங்கள் இருப்புகள்தான்
நிச்சயமற்றன.

உங்களைச் சொல்லி என்ன?

புதிய விடியலிற்குப் பிறகு
மண்ணை மிதிக்கும்
கனவுகளுடன்
பாதுகாப்பாய் நீங்கள் இருப்பது
தவறல்லத்தான்.
ஆனால்
உள்ளூர்ச் சந்ததியை
என்ன செய்வதாய் உத்தேசம்?

நாங்கள் கேட்டழ
பதில் தேடி
தத்துவம்,தகவல்.கட்சி,குழு என்று
நீங்கள் குழம்ப....

வேண்டாம்!

அடுத்த வருடங்களிலாவது
ஒரு உலகில் வாழுவோம்.
வருகிறீர்களா???

* அப்பு

---

வாசகர் கடிதங்கள் பற்றி....
தூண்டில் கொண்டுவரும் அனைத்தைப் பற்றியும் உங்கள் கருத்துகளை எதிர்பார்க்கிறோம். சிரமமெனினும், இயலுமானவரை, சுருக்கமாக வாசகர் கடிதங்கள் அமையின் மேலும் பலருக்கு இடமளிக்கலாம்தானே. மிக நீளமாகப் போய்விடுமெனில் வாசகர் கடித வடிவிலல்லாது தனிக் கட்டுரை வடிவில் எழுதியனுப்புங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வித்தியார்த்தியின் டயரி

வித்தியார்த்தி எதிர்பார்த்திருந்ததுதான். ஆனால் இத்தனை விரைவில் அல்ல. வெளிநாட்டவர் மீது நேரடியான, பகிரங்கமான கொலை வெறித் தாகுக்தல்கள் மேற்கொள்ளப்பட்டபோது வித்தியார்த்தி அதிர்ச்சியடைந்துதான் போனான்.

தொலைக்காட்சி, வானொலி, சஞ்சிகைகள், பத்திரிகைகள் மட்டுமன்றி இங்கு வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகைகள் சிலவும் நாஸிகளின் தாக்குதல்கள் பற்றி வெவ்வெறு தளங்களில் நின்று முக்கியத்துவமளித்துக்கொண்டிருந்தன.

இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற முனைப்புடன் வித்தியார்த்தி தனது நண்பர்களை அணுகியபோது, "சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுப்பானேன்" என்றுதான் பலரும் பதில் சொன்னார்கள்.

ஜேர்மனியில் உக்கிரமடைந்து கொண்டிருக்கும் இன-நிற வெறித் தாக்குதல்களைப் பற்றி ஏனைய நாடுகளிலிருக்கும் தனது நண்பர்கள் (இலங்கையில் ஒன்றாக ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள், ஜேர்மனியில் ஒரே அறையில் இருந்துவிட்டு காணாமல் போய் வேறு நாடுகளில் தோன்றியவர்கள்) எட்படி எடுத்துக்கொண்டுள்ளார்கள் என்று அறியும் ஆவலுடன் நூற்றுக்கு மேற்பட்ட மார்க்குகளைச் செலவழித்து வித்தியார்த்தி தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோது பெற்ற தகவல்கள் கீழ்வரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறு:

" இங்கை அடையார் கூட. உங்க நடக்கிற மாதிரி பிரச்சினை இங்கை வராது" - பிரான்ஸ்

" இருந்திட்டு உப்பிடியேதேன் நடக்கும். உதை நாங்கள் அவ்வளவு மைண்ட் பண்ணிறதில்லை" - இங்கிலாந்து

" இங்கத்தையில் சனம் எங்களோடை அந்த மாதிரி" - கொலண்ட்

"தமிழாக்களோடை இடைக்கிடை சொறியிறவங்கள்தான். ஆனா துருக்கியளைத்தான் அவங்களுக்குக் கண்ணிலை காட்டேலாது" - சுவிஸ்

" உங்க உப்பிடி பிரச்சினை என்டா இங்க வா" - நோர்வே, சுவீடன், டென்மார்க்

" எங்கடை சனத்துக்கு நாங்கள் கை வைச்சாலொழிய வேறை ஆரும் கைவைக்கேலாது. இது ஒரு யாழ்ப்பாணம்தான்" - கனடா

அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகளில் திட்டமிடப்பட்டு கொம்பு சீவிவிடப்படும் இன-நிற வெறித் தாக்குதல்கள் எப்படி எங்களைப் பாதிக்கப் போகின்றன? எப்படி இவற்றை எதிர்கொள்ளப் போகிறோம்? என்றோ, சுதந்திரமாக வாழ்வதற்கு எமது மண்ணில் என்ன செய்யப் போகிறோம் என்றோ அலட்டிக்கொள்ளாத போக்குக் குறித்து வித்தியார்த்தியால் கவலை கொள்ளாமலிருக்க முடியவில்லை.




ஆசிய நாடுகளுக்கான தொலைக்காட்சி ஒளிபரப்பை விஸ்தரிப்பதற்காக இலண்டன் புதிய செய்மதியை அனுப்பிவிட்டது என்பதைக் கேள்விப்பட்டதிலிருந்து வித்தியார்த்திக்குத் தலையிடிக்க ஆரம்பித்துவிட்டது.

முதற்கட்டமாக M-TV யும், SKIயும் இழுக்க ஆரம்பித்துவிட்டனவாம். விரைவில் 24 மணி நேர ஒளிபரப்பாகிவிடுமாம். ஏனைய RTL Plus, SAT 1, PRO 7 சனலுகளும் ஒளிபரப்பாகுமாம்.

இனியென்ன? மேற்கு நாடுகளில் வயது வேறுபாடின்றி அனைவரது மூளையையும் சிறைப்பிடித்து வைத்திருக்கும் வக்கிரமான நீலப் படங்களும், வன்முறைப் படங்களும், ஆபாசங்களும், குரூரங்களும் தங்கள் பசிக்கு ஆசிய நாட்டவர்களின் மூளைகளையும் தீனியாக்கப் போகின்றன என்பதை நினைத்தபோது வித்தியார்த்திக்கு பயத்துடன் ஆத்திரமும் ஏற்பட்டது.

www.tamilarangam.net






மேற்குநாடுகளில் கொடிகட்டிப் பறக்கும் பாலியல் வன்முறைகளும், போதைப் பொருட் பாவனையும், சீரழிவுக் கலாச்சாரங்களும் ஆசிய நாடுகளுக்குச் சினிமா, புத்தகங்களுக்கூடாகப் போனதைவிட இனி செய்மதியூடாகவும் 24 மணிநேர ஏற்றுமதி செய்யப்படப் போகின்றன. இதற்கெதிராக ஆசிய நாடுகளில் முன்னெடுக்கப்படும் புதிய கலாச்சாரப் போராட்டத்திற்கு இந்திய வீடியோக்களிலும், இந்திய நடிகர்களின் மேடை நிகழ்ச்சிகளிலும், திரைச்சித்திரா, மாருதங்களிலும் மூழ்கியிருந்துகொண்டு எப்படிப் பலமளிக்கப் போகிறோம் என்று வித்தியார்த்தி கேட்கிறான்.

தனது பிறந்தநாளன்று, அவுஸ்திரேலியாவிலுள்ள "இலங்கை மாணவர் நம்பிக்கை நிதியம்" மூலம் பெற்றுக்கொண்ட விபரங்களின்படி, இலங்கையிலுள்ள வறிய மாணவர் ஒருவருக்கு அவரின் பல்கலைக்கழகத் தேர்வு வரையிலான படிப்புக்கு உதவும் பணத்தை காலாண்டு கால இடைவெளியில் அனுப்ப ஆரம்பித்துள்ளான் வித்தியார்த்தி.

- தொகுப்பு: இரா.செல்வத்துரை

www.tamilarangam.net

# நாம் சொல்வதெல்லாம் உண்மை !!!

உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை.

✳

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் வாக்குத்தான் வெற்றியை நிர்ணயிக்கும் என்பதை நாம் அறிவோம். இதனைக் கருத்திற் கொண்டே தமிழர் கட்சிகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடாத்திவருகிறோம்.

– சுதந்திரக் கட்சி

✳

முன்னைய சிங்கள மன்னர்களைப் போன்றே எமது ஜனாதிபதியும் பௌத்த பிக்குகளின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் பெற்றுச் செயற்பட்டு வருகிறார். பௌத்த சமயத்திற்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் எமது அரசாங்கம் மேன்மேலும் உழைத்து வருகிறது

– பிரதம மந்திரி

✳

முன்னொரு காலத்தில் தேயிலை, இறப்பர் போன்றவற்றை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெற்றோம். இன்று எமது மதிநுட்பத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துப் பணம் சம்பாதிக்கிறோம்

– மத்திய மாகாண முதலமைச்சர்



www.tamilarangam.net



ஈழத்திலிருந்து

# தேசத்தின் கூர்ப்புகள்

ப்ரஜைகள்

சமரில் வெளிவந்திருந்த கட்டுரை தொடர்பாக நண்பர் தெரிவித்த கருத்துகள் முக்கியமானவை. தேசியவாதம் தொடர்பாக சமரிடம் இருக்கும் கருத்துகட்கும், 'அழிவு அரசியல்' கருத்தாளர்களது கருத்துகட்கும் இடையில் வேறுபாடு இல்லையென்று அவர் தெரிவித்தார். முதலாளித்துவத் தேசியவாதம் போன்ற பதங்களைப் புலி குறித்துப் பாவிக்கின்றபோது அவர்கள் மறுத்துரைக்கிற வேகத்தைப் பார்த்தால், முதலாளியத் தேசியவாதம் தொடர்பாக அவர்களுக்கும் ஒரு வித தூய்மைவாத அபிப்பிராயம் இருப்பதாகவே படுகிறது. முதலாளித்துவ தேசியவாதம் 'முற்போக்கானது' என்பது ஒரு முழுமையான உண்மையல்ல. சமர் குறிப்பிடும் ' சிந்தனையாளர் ' சொன்னது போல குடியரசு முழக்கங்களை முழக்குவதே முற்போக்கு ஆகி விடாது. முதலாளியத் தேசியவாதம் பழைய பிரபுத்துவ உற்பத்தி மற்றும் உறவுமுறைகளிலிருந்து விலகுவதான வரலாற்று நியதியுடன் ஒத்துப்போகிற பண்பைக் கொண்டிருந்ததால் அது முற்போக்கு எனக் கொள்ளப்பட்டது. ஆயினும் அது முரணற்ற விதத்தில் தனது முற்போக்கை வரலாற்று வளர்ச்சிப் போக்குடன் ஒன்றியதாகக் கொண்டிருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் வரலாற்றின் போக்குட அவர்களுடைய போக்கும் ஒன்றா - ஒரே திசையை நோக்கியதாக இருந்ததால் அவர்கள் முற்போக்கெனப் பேசப்பட்டார்கள். ஆனா வரலாறு தொடர்ந்து வளருவதற்கு அவர்கள் தடையாக இருப்பதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இன்று அவர்களின் பாத்திரம் பிற் போக்காகியது. அவர்கள் வரலாற் றின் திசை வழியே செல்லாமல் அதைத் தமக்கேற்ற விதத்தில் தடு த்து நிறுத்த முயன்றார்கள். அன்று பிரபுத்துவத்தை எதிர்த்து முதலா ளித்துவம் புரட்சி செய்தபோது அத ற்கிருந்த முற்போக்கு அம்சங்கள் பின் அவசியமற்றவையாகிவிட்டன. அதனால் அது அதனது உலகளா விய பண்பையும் மாற்றிக்கொண்டு விட்டது. இன்றைய முதலாளிய தேசியவாதத்தில் அந்த - அன்று முற்போக்கெனக் கருதப்பட்ட - அம்சங்களுடன் கூடவே அது அன்று அறிந்தேயிராத பிற வர்க்கங்களின் ஜனநாயகக் கோரிக்கைகள், பாட் டாளி வர்க்கப் புரட்சி என்பன பற் றிய அச்சமும் உள்ளது. எனவே அதன் இயல்பு முன்னையது போல இருக்க முடியாது. சமர் இதைக் கணக்கிலெடுக்கத் தவறிவிடுகிறது. முதலாளித்துவ தேசியவாதம் அன்று இருந்தது போலவே இன்றும் முற் போக்கானதாக இருக்கும் என்று நம்புகிறது. அன்றைய தேசியவா தத் தலைவர் சன்யாட் சென்னை அது முதலாளித்துவ தேசியவாதத் தின் பிரதிநிதியாகக் கருதுகிறது. சென்யாட் சென் இன்று இருந்தால் கூட அவர் அன்று இருந்ததுபோல இருந்திருக்க முடியாது. ஒன்றில் அவர் பிரபாகரன் போலவோ (என்று சொன்னால் சமருக்குப் பிடி க்குமோ என்னவோ?) அல்லது ஒரு கொம்யூனிஸ சார்புள்ள ஜன நாயகவாதியாகவோதான் இருந்தி ருக்க முடியும். முதலாளிய தேசிய வாதத்தின் பிரதிநிதியாக சீன உதாரணமான சென்யாட் சென் னைக் கருதுபவர்கள் வரலாற்றின் இன்னொரு உதாரணமான கமால் பாட்சாவையும், துருக்கியப் புரட்சி யைப் பற்றியும் யோசித்துப் பார்ப் பது நிலமையை மதிப்பிட கூடுத லாக உதவக்கூடும்.

முதலாளித்துவ தேசியவாதத் தின் இன்றைய போக்கு புலியின் தன்மையுடன் பொருந்துவது பற்றி நாம் எழுதியதை அவசரப்பட்டு மறுப்பது முதலாளித்துவ தேசிய வாதம் புலிகளையும், அவர்களது போக்கையும்விட சிறப்பானது என்ற கருத்தின் அடிப்படையி லேயே. ஆனால் உண்மை அப்படி யல்ல. முதலாளிய தேசியவாதம் ஜனநாயகத்தை ஒருபோதும் பிற வர்க்கங்கட்கு அனுமதித்ததில்லை. தனது சொந்த அதிகாரத்திற்காக முதலாளிய வர்க்கம் ஜனநாயகத் திற்காகக் குரலெழுப்பியது. அதன் அர்த்தத்தில் குடியரசு என்பது குடி மக்களது அரசல்ல. மாறாக முத லாளிய வர்க்கத்தின் முடிசூடாத முடியரசே.

ஆக, முதலாளித்துவத் தேசிய வாதம் தூய்மையான, ஜனநாயகத் தன்மையான ஒன்றல்ல. அது தனக் கேயுரிய முரண்பாடுகள் காரண மாக முன்பை விடவும் அதிகளவில்

www.tamilarangam.net

ஒடுக்கும் இயல்புள்ள ஒரு வர்க்கச் சித்தாந்தமே!.

நாம் முன்னரே குறிப்பிட்டது போல முதலாளியத் தேசியவாதம் புலிகளுக்கான ஒரு பாராட்டு அல்ல. அது ஒரு மதிப்பீடே ஆகும்.

தரகு முதலாளியக் கும்பல் என்று புலிகளைக் கருதுகின்ற சமர் அதைத் தரகு முதலாளிய வர்க்கப் பிரதிநிதியாகக் கருதி தனது ஆய்வுகளைச் செய்யவில்லை என்பது அடுத்த பிரச்சினை. நண்பர் இப்படிச் சொல்லும்போது நான் இடைமறித்துக் கேட்டேன்.

"எப்படி அவ்வாறு உன்னால் கூற முடியும்?"

"ஏனென்றால் சமர் 'தமது சொந்த நலன்', 'குழு நலன்' என்ற பதங்களைப் பாவிக்கிறதேயொழிய தரகு முதலாளிய வர்க்க நலன்கள் எவை? அதன் அரசியல் கோசங்கள் எவை? அவை எப்படிப் புலிகளுடைய கோஷங்களுடன் பொருந்துகின்றன என்று சுட்டிக்காட்டவில்லை"

"ஆனால் அவர்கள் தேசியமுதலாளிய வர்க்கம் என்று ஒன்று வடக்கு, கிழக்கில் இருக்கமுடியாது என்றும் அதனால் அங்கு தலைமை தாங்குவது தரகுமுதலாளிய வர்க்கமே என்றும் கூறுகிறார்களே"

"அவர்கள் சொல்வதில் தர்க்கம் இருப்பது உண்மைதான். ஆனால் அந்தத் தர்க்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ள அடிப்படையிலேயே குறைபாடு இருக்கிறது. 'ஒரு போராட்டத்தை உறுதி மிக்க வர்க்கமே நடத்தமுடியும்' என்றும், அது தரகுமுதலாளிய வர்க்கம் அல்லது வறியகூலி விவசாயிகள் தேச விடுதலைக்கு தலைமைச் சக்தியாக முடியும் என்றும் எனவே புலிகள் தரகுமுதலாளிய வர்க்கத்தின் பிரதிநிதிகளே என்றும் நிரூபிக்கின்றனர். ஒரு கட்சி அல்லது அரசியல் இயக்கம் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை இத்தகைய தர்க்கங்களால் முடிவுகட்டிவிட முடியாது. மாறாக நிலவுகிற அரசியல் காலகட்டம், அரசியல் போக்கு, அதில் அக் கட்சி வைக்கும் கோரிக்கைகள், அதன் பாத்திரம் என்ற 'ஸ்தூலமான' நிலமைகளில் இருந்து கணிக்கவேண்டும். மதிப்பிட வேண்டும்.

இலங்கையில் 'தேசியமுதலாளித்துவ சக்தி இருக்கமுடியாது' என்ற எடுகோளிலிருந்து கட்டியெழுப்பப்படும் இந்தத் தர்க்கம் சமரை அறியாமலே நடக்கிற போராட்டம் தேசியப் போராட்டம் என அங்கீகரிப்பதில் சமரைக் கொண்டுபோய் விட்டுவிடுகிறது – இதை அவர்கள் அங்கீகரிக்காத போதும்..."

www.tamilarangam.net




"எப்படி?"

"நடக்கிற போராட்டம் தேசியப் போராட்டம் என அங்கீகரித்தால்தானே அதைத் தலைமை தாங்கும் சக்தி புலி எனவும், ஆகவே அது தரகுமுதலாளித்துவமே என்றும் தர்க்கிக்க முடியும்."

"சரிதான். நீயும் தர்க்கம் பேசத் தொடங்கிவிட்டாய்!"

"தர்க்கமில்லை. இதைத்தான் அடிப்படையிலேயே குறைபாடுள்ள எடுகோள் என்று சொன்னேன். ஒடுக்கப்படும் தேசிய இனம் பிரிந்து போவதற்கான போராட்டம் என்பது வெறும் முதலாளி வர்க்கத்திற்கு மட்டுமல்ல அனைத்து வர்க்கங்களுக்கும் பொதுவான ஒன்றாகும். நடக்கின்ற போராட்டத்தினை மத்தியதர வர்க்கம் நடத்துவதாகக் கருதினாலும் அது தரகு முதலாளித்துவத்துடன் சார்ந்துவிட முடியும். எனவேதான் சமர் இதைத் தரகு முதலாளிய வர்க்கப் போராட்டம் என்று குறிப்பிடுகிறது. ஆனால் தரகு முதலாளிய வர்க்கத்தின் அரசியல் கோரிக்கைகள் எப்படி அமையும் என்று அது குறித்துக் காட்டவில்லை. மாறாக புலிகளின் குழு நலன் என்றே குறிப்பிடுகிறது."

"ஆனால் அவர்கள் நாம் கூட புலிகளின் பின்னாலுள்ள சமூக சக்திகள் யார் என்று சொல்லவில்லையே எனக் கேட்கிறார்கள். புலிகளின் சிந்தனைப் போக்கை முதலாளியத் தேசியவாதம் என்று நாம் சொல்கிறோம் என்றாலும் அவர்

www.tamilarangam.net

கள் எந்த வர்க்கத்தின் பிரதிநிதி கள் என்று சொல்லவில்லை என்கி றார்களே"

"உது ஒரு சிக்கலான கேள்வி தான். ஆனால் சிக்கலுக்கான கார ணம் தேசியவிடுதலைப் போராட்ட காலகட்டமாக இது இருப்பதே. உதாரணமாக யப்பானிய எதிர்ப் புப் போராட்டத்தை சீனக் கொம்யூ னிஸ்ட் கட்சி நடத்தியபோது கட் சியை யாருடைய பிரதிநிதியாகச் செயற்பட்டது என்று சொல்லலாம்? கட்சி பாட்டாளி வர்க்கத்தின் பிரதி நிதியாக மட்டுமா அன்று தொழிற் பட்டது? இல்லை. அது முழு மக் களதும், அனைத்து தேசிய வர்க் கங்களினதும் நலனைக் கருத்திற் கொண்டது. தேசிய வர்க்கங்களி டையே ஐக்கியத்தைப் பேணியது. அப்போது கட்சியின் பின்னாலிருந் தது பாட்டாளி வர்க்கம் மட்டுமல்ல.

இன்றைய போராட்டத்தின் கோரிக்கைகள் என்ன? அந்த கோரிக்கைகளில் எவற்றைப் புலி கள் உயர்த்திப் பிடிக்கிறார்கள்? என்பவற்றை வைத்தே அவர்களது போக்கு முதலாளித்துவ தேசிய வாதம் என நாம் கூறுகிறோம். அவர்களின் பின்னாலுள்ள சக்திகள் யார் என்றால், இந்தக் கோரிக்கை களின் தேசியத்தன்மை காரணமாக முழுத் தேசிய வர்க்கங்களுமே நிற் கின்றன என்றே சொல்லவேண்டும்!. அவர்களைவிட முன்னேறிய அரசி யல் கோரிக்கைகளை முன்வைக்கும் புரட்சிகர, ஜனனாயக, பாட்டாளி வர்க்கச் சக்திகள் மட்டுமே அவர் களின் பின்னால் இல்லை என்று சொல்ல வேண்டும். புலிகளின் முத லாளிய தேசியவாதத்திற்கேயுரிய ஜனனாயக மறுப்புக் காரணமாக மக்களிடையே நம்பிக்கையுணர்வும், எதிர்ப்புணர்வும் இருந்தபோதும் அனைத்து வர்க்கங்களினதும் நலன் கள் புலிகளின் தேசியக் கோரிக்கை களுடன் பிணைந்துள்ளதால் அவர் கள் அனைவரும் பின்னால் உள்ளன ரென்றே சொல்ல வேண்டும்.. ஒரு குறிப்பிட்ட கட்சி எந்த வர்க்கத் தின் பிரதிநிதி என்பது பற்றிய கேள்விக்கு இது அல்லது அது என்று திட்டவட்டமாக - அதுவும் இது போன்றதொரு போராட்டச் சூழலில் - அறுதியிட்டுச் சொல் வது சாத்தியமில்லை. ஆனால் அதன் கோரிக்கைகள் பெருமளவு எதைச் சார்ந்தவை என்று சொல் லமுடியும். புலிகளை 'முதலாளித் துவ தேசியவாதிகள்' என நிரூபி க்க எம்மிடம் என்ன இருக்கிறது என்று சமர் கேட்கிறது. அவர்கள் முதலாளித்துவ தேசியவாதிகள் அல்லது அதன் பிரதிநிதிகள் என நிரூபிக்க வேண்டிய அவசியம் எம க்கு இல்லை. ஏனென்றால் அவர்க ளது அரசியல் கோரிக்கைகளே அவர்களது முதலாளித்துவ தேசிய வாதத்திற்கு போதுமான சான்று களாகும். உதாரணமாக சமர் எடுத் தாண்ட உதாரணங்களைப் பார்ப்

www.tamilarangam.net

போம்.

பக்கம் 37இல் அவர்கள் குறிப்பிடும் புலிகளுக்கும்-ராஜீவுக்கும் இடையிலான உடன்பாடு, பிரபாகரனின் சுதுமலைப் பேச்சு என்பனவற்றில் 'தமிழ்மக்களின் இறைமையும், தேசிய நலனும்' பாதுகாக்கப்படுகிறதா? என்று சமர் கேட்கிறது. அங்கே முதன்மைப்படுத்தப்படுவது தனிப்பட்ட குழு நலனும், அதிகார வெறித்தனமுமே என்று அது கூறுகிறது. பிரபாகரன் இந்தியாவின் பாதங்களில் விழுந்து கிடந்தார் என்கிறது. ஆயுதமற்ற பேச்சுவார்த்தைக் குழுவாகத் தம்மால் நிலைகொள்ள முடியாது என்பதால் ஆயுதத்தை முற்றாகக் கொடுக்கவில்லை என்கிறது. திலீபனின் உண்ணாவிரதக் கோரிக்கைகளை முன்வைத்து அவை 'முடிவடைந்துவிட்டன' என்றும் சொல்கிறது. இவையெல்லாவற்றையுமே கொஞ்சம் அவதானமாகப் பார்த்தால் புலிகளின் சிந்தனை ஓட்டம் தெளிவாகும்.

புலிகளின் 'சொந்தநலன்', 'குழு நலன்' என்பவற்றுக்குப் பின்னாலுள்ள கோரிக்கைகள் தமிழ்மக்களின் தேசிய நலனுடன் இணைந்த கோரிக்கைகளாக உள்ளன. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதில் புலி ஊசலாடுகிறது என்பது மட்டுமே ஒருவர் இவற்றிலிருந்து வரக்கூடிய முடிவுகளாகும். 'முறிந்த பனைமரத்'தைச் சாட்சிக்கு அழைக்கும் சமர் திலீபன் செத்து இன்றைவரை அன்று முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறிவிடவில்லை என்பதை அவசரத்தில் மறந்துவிட்டது!. அதாவது அது உண்மைகளை விட்டு வேறுவிதமான முடிவுக்கு வந்துவிடுகிறது.

42ஆம் பக்கத்தில் புலிகளின் வெளியீடுகளில் இருந்து எடுத்த மேற்கோள்களும், புலிகள் இந்தியாவுடன் நடாத்திய பேரமும் முரண்படுகிறது என்று காட்டிப் புலிகளைத் தரகு முதலாளிய - தேசியத் தன்மையற்ற - சக்திகள் என்று சமர் குறிப்பிடுகிறது. உண்மை என்னவென்றால் இந்திய ஒப்பந்த காலத்திலும், அதன் பிறகும் அவ்வொப்பந்தத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டும், அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் பிரச்சாரம் செய்து வந்த த.வி.கூ.வினர் *"இந்தியாவுக்காக"* தமிழ் மக்களதும், இலங்கையினதும் நலன்களை விற்கத் தயாராக இருந்தார்கள். சமரின் கூற்றுப்படியே புலிகள் *" தமது நலனுக்காகவே "* தமிழ் மக்களின் நலனை விற்கத் துணிந்தார்கள். இது முதலாளித்துவத் தேசியவாதத்தின் தன்மையன்றி வேறொன்றுமல்ல. ஏகாதிபத்தியங்களுடனும், இந்திய வல்லரசுடனும், இலங்கையரசுடனுமான புலிகளின் உறவு தமது தனித்துவத்தை அங்கீகரிப்பதை மையமாகக்கொண்டே அமைந்துள்ளது. புலிகளின் அரசி

www.tamilarangam.net

யல் கோரிக்கைகள் த.வி.கூ.விනු டையதைவிட முன்னேறியவை. தமிழீழத்தைப் பெற இந்தியாவைத் 'தலையிடுமாறு' த.வி.கூ. கேட்டது. புலிகளோ இந்தியத் தலையீடு 'தமது தனித்துவத்தை அங்கீகரித்தே' சாத்தியமாக வேண்டும் என்றது. இதற்கு மேல் ஒரு 'மூன்றாம் உலகநாட்டின்' முதலாளியத் தேசியவாதத்தின் 'போர்க்குணம்' வேறெப்படி இருக்கமுடியும்?.

எமது போராட்டத்தின் இன்றைய சிந்தனையில் கூட்டணியினால் முதுசமாக வழங்கப்பட்ட தரகு முதலாளியச் சிந்தனையின் தாக்கம் இருப்பது உண்மைதான். அது பரந்துபட்ட மக்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கமும், அதற்குப் பதிலாக புலிகளின் முதலாளியத் தேசியவாதக் கருத்துகள் மக்களைச் சென்றடையாமையும், புலிகளின் சனனாயக விரோத (இது கூட்டணியிடமும் இருந்தது!) நடைமுறையும் போராட்டத்திற்கும், மக்களுக்கும் இடையில் ஒரு இடைவெளியை உருவாக்கியுள்ளது. புலிகளது அரசியல் கருத்துகள் ஒடுக்குமுறையை முற்று முழுதாக நிராகரிப்பதில்லை. 'தமிழீழத்தில்' தமிழ்மக்களது பேரால் தாம் விரும்பும் அதிகாரத்தினை எதிர்ப்பதுதான் அதன் பிரச்சினையாகவிருக்கிறது.

கூட்டணியின் தரகு முதலாளியச் சிந்தனை ஆதிக்கத்தினால் அதனுடன் கூட்டுச் சேர்ந்த போலி சனனாயகக் குழுக்கள் போராட்டத்தில் காத்திரமான பங்கெதையும் வகிக்க முடியவில்லை. அவர்கள் இந்திய நலன்களுக்காக நின்றார்கள்; பின் இலங்கையின் ஒற்றையாட்சிக்குத் தலைவணங்கி, சிங்கக் கொடி ஏற்றி ஐக்கியத்தைப் போற்றினார்கள். பாராளுமன்றத்திற்குள் புகுந்து 'புரட்சி' செய்கிறார்கள்.

புலிகளோ ஊசலாட்டத்தைக் கொண்டிருக்கின்ற போதிலும் 'ராஜதந்திரம்' என்று கூறிக்கொண்டு படுகுழிகளில் பல தடவைகள் விழுந்தபோதும், இந்தியாவின் பிராந்திய நலனை முற்று முழுதாக எதிர்ப்பவர்கள் அல்ல என்ற போதிலும் அதற்காக அவர்கள் தமிழ்ப் பகுதி மீதான அதிகாரத்தைப் பிறரிடம் கொடுத்துவிடத் தயாராக இருக்கவில்லை. காரணம் அவர்களது அரசியலுக்கு அது முடியாமலுள்ளது. அவர்களது அரசியல் வெற்றி பெறும் அளவுக்கு வலிமை மிக்கதல்ல. தோல்வியுறும் அளவிற்குப் பலவீனமானதும் அல்ல. இதுவே அவர்களது இருப்புக்கான நியாயமாக உள்ளது. இதைத்தான் முதலாளித்துவத் தேசியவாதம் என நாங்கள் சொல்லுகிறோம்."

*(மிகுதி அடுத்த கலத்தில்)*

www.tamilarangam.net

# 19 மாசி 1991 நினைவுகள்

வருடம் முழுவதும்
ஓடிக் களைத்த
மேகக் குதிரை
தள்ளிய நுரையாய்
தரையில் பரவிய வெண்பனி
தன் முகத் திரை கிழித்து,
' கொடிய குளிராய் '
ஆதிக்கம் செலுத்தும்.

கடைகளின் முன்னே
விற்பனைக்காக
தொங்கிக் கிடக்கும்
' வசந்தகால ஆடைகள் '
"நிரந்தரமல்ல உன் ஆதிக்கம்"என
குளிரிடம் கூறுரைக்கும்.

தோளைத் தட்டி
கற்பனை கலைத்த
' ஜேர்மன் மம்மா '
எப்போதும் போலவே
என்னைப் பற்றியும்.
நாட்டைப் பற்றியும்
குசலம் கேட்க

மக்களே தம்மைப்
' புரட்சி செய் ' என
தூண்டினர் என்பதால்
மக்கள் மீது வெறுப்புக்கொண்டு
அரசைத் தழுவும்
என் முன்னை நாள்
' தோழர்கள் '

" கண்ணீர் விட்டு
வளர்த்த இப் பயிரை
யாரும் கருக்கத்
திருவுளமோ " என
கருக்கும் செயலையும்
தாங்களே தனித்து
முடிக்க நினைக்கும்
' அறிவு சால் வீரர்கள் '

சிறுவர் பிணத்தில்
ஏறி நின்று
"வன்முறை மீது காதல் இல்லை"
என்று கூவி
அரியாசனம் பெறும்
போரத்தில் ' சோழர் '

www.tamilarangam.net

மார்க்கம் அறியா
மக்களை மறந்து
சோழர் போடும்
உயிர்ப் பிச்சைக்காய்
தலை கொய்!
குடல் எடு!
சுடு சுடு! என
கசாப்புக் கடையில்
கவிதைகள் விற்கும்
' கவிஞர்கள் '

ஒருவரை ஒருவர்
பொருதவிட்டு
வேடிக்கை பார்க்கும்
' அரசு '

என் மண்ணோடும்
இரத்த நதியின்
' மூலம் ' இதுவென
நானும் சொல்ல
" எனினும்
வளைகுடாவினைப் போல்
சத்தமில்லை:
யுத்தமென்கிறாய் "
ஐரோப்பிய வாய் திறந்தாள்
' மம்மா '

இங்கு நேரடியாக
நீங்களே அடிப்பதால்
சத்தம் அதிகம்.

அங்கு நீங்கள் சொல்லி
நாங்களே அடிப்பதால்
சத்தமும் குறைவு.

கோழிக் குஞ்சில் கால்களைப் பதித்த
பருந்தைப் போல
எத்தனை காலம்
வறிய நாடுகளில்
உங்கள் சமூகம்
கால்களைப் பதிக்கும்?

எங்கள் நாட்டு சமூகக் கடலில்
' வஸ்கொடகாமாக்கள் '
மரித்துக்கொண்டிருப்பினும்
' நம்பிக்கை முனைதனை '
காணும் வரையிலும்
திரும்பத் திரும்ப
பிறந்து கொண்டிருப்பர்.

மனது புழுங்கி
ஜேர்மன் மொழியில்
இதனைச் சொல்ல
சொல்லைத் தேடி
நிமிர்ந்து பார்த்தேன்.
மம்மா சென்று
அதிக நேரம்.

மீண்டும் என் பார்வை
சுற்றிலும் தெறிக்க
கற்பனையின்றி
கடைகளின் முன்னே
விற்பனைக்காகத்
தொங்கிக் கிடக்கும்
' வசந்தகால ஆடைகள் '
" நிரந்தரமல்ல உங்கள் ஆதிக்கம் " என
குளிரிடம் கூறுரைக்கும்.

○ இரா.றஜீன்குமார் ○

www.tamilarangam.net




01.11.91 (வீ) 0000000000000
பண்டாரவளை கிறேக் தோட்டத்தில் வீட்டு வசதி போதாத நிலையில் தற்காலிகக் குடிசைகளை அமைத்த 5 தொழிலாளர்களும். இதே வசதியற்ற நிலைமையில் தோட்டத்திலுள்ள காரியாலயங்கள் போன்ற இடங்களில் சமைத்த 21 தொழிலாளர்களும் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இதை ஆட்சேபித்தும், தொழிலாளிகளுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கோரியும் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது.

04.11.91 (வீ) 000000000000
ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்களை தனியார் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கையை ஆதரிப்பதென தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா தீர்மானித்துள்ளது.

05.11.91 (வீ) 000000000000
அதிஷ்டவசமாக எனக்கு எதிரான கிளர்ச்சி பலரால் தொடுக்கப்படவில்லை. 7 அல்லது 8 பேரால் மாத்திரமே தொடுக்கப்பட்டுள்ளது - பிரேமதாசா

08.11.91 (வீ) 000000000000
அம்பாறையிலுள்ள பல்வேறு தமிழ்ப் பகுதிகளிலும் அடிக்கடி படையினரின் சுற்றிவளைப்புகள் நடைபெறுவதால் தொழிலாளர்கள் தத்தமது வேலைக்குச் செல்லமுடியாது கஷ்டப்படுகின்றனர். எங்களைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்த வேண்டாம். இதனால் பொதுமக்களாகிய நாங்களே வீண் துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது. வேண்டுமானால் நாங்களும் படைமுகாமுக்கே வந்து வாழ்க்கை நடாத்துகிறோம். எங்களுக்கு இப்போதைய நிலை

www.tamilarangam.net

யில் உணவும். உடையும் தந்தால் போதுமானது எனப் படையினரிடம் தொழிலாளர்கள் கூறி வருகின்றனர்.

10.11.91 (வீ) 0000000000000 தொண்டமானுக்குப் புலிகள் இரண்டாவது பதில் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர். புலிகளின் பதில் என்ன என்பது வெளியிடப்படாத போதிலும் அது ஊக்கமளிப்பதாக உள்ளது என தொண்டமான் வர்ணித்துள்ளார்.

11.11.91 (வீ) 0000000000000 அடுத்த வருடத்திற்கான அரசின் மொத்தச் செலவு 156.6 பில்லியன் ரூபாவாகவும், வருமானம் 87 பில்லியன் ரூபாவாகவும், விழுக்காடு 68.5 பில்லியன் ரூபாவாகவும் இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த வருடத்தைப் போலவே விழுக்காட்டை ஈடுசெய்வதற்கு இம்முறையும் பிறநாட்டு உதவியை அரசு கோரியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்களைச் சிறுபான்மையாக்குவதற்காக தெய்யத்த கண்டி என்ற பகுதி ஒன்றை ஏற்படுத்தி அப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு குடியேற்றம் நடைபெற்று வருகிறது. பொதுவாக அம்பாறை, மட்டக்களப்பு. திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் பேசும் மக்களை மேலும் சிறுபான்மையினராக்குவதற்கு பெரும்பான்மைச் சமூகங்களின் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன - மு.கா

12.11.91 (வீ) 0000000000000 மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ள வெல்லாவெளி, பட்டிப்பளை. வவுணதீவு ஆகிய படுவான்கரைப் பிரதேசங்களில் அரசால் மேற்கொள்ளப்பட்ட சக்கராயுதம் இராணுவ நடவடிக்கையில் தாந்தாமலை அகதிமுகாம் எரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திக்கொடையில் மீளக் குடியமர்ந்த மக்களின் குடிசைகளும் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டுள்ளன.

நாடெங்கிலும் உள்ள 541 கிராமிய வைத்தியசாலைகளும், மத்திய டிஸ்பென்சரிகளும் வைத்திய உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தத்தினால் மூடப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சருடன் 10 தடவைகள் பேச்சு நடாத்தியும் வெற்றியளிக்காததால் இவ் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக உத்தியோகத்தர்கள் கூறியுள்ளனர்.

13.11.91 (வீ) 0000000000000 கடந்த வருடம் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களை

www.tamilarangam.net

க்கூட அறுவடை செய்யமுடியாது, கால்நடைகளையும், வீடு வாசல்களையும் கைவிட்டு, பீதியுடன், உடுத்த உடையுடன் உயிர் தப்பிவந்த பட்டிருப்பு கிராமத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் சமைத்துச் சாப்பிடக்கூட பாத்திரங்கள் இன்றியும், மாற்ற உடைகள் இன்றியும், படுத்துறங்க வசதிகள் இன்றியும், போதிய நிவாரணங்கள் இன்றியும் கண்ணீரும், கம்பலையுமாக அவலப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமது வீடு வாசல்களைப் பார்த்து வரச் செல்லும் ஆண்கள் ஊர்க்காவற்படையினரால் கடத்தப்பட்டும். கொல்லப்பட்டும் வருகின்றனர்.

14.11.91 (வீ) 000000000000 தனவந்தர்களுக்கு உற்சாகம் ஊட்டி. அவர்களிடமிருந்து தேர்தல் நிதியைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டே நிதியமைச்சர் வர்த்தகர்களுக்கும். கொம்பனி முதலாளிகளுக்கும் வரிச் சலுகை வழங்கியிருக்கிறார்.

இவ் வருடத்தைய வரவு-செலவுத் திட்டத்திலும் சம்பள உயர்வு எதுவுமின்றி தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புச் செலவுக்காக கூடுதல் நிதியை ஒதுக்கிய தன் மூலம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே முடிந்த முடிவு என்றும், அரசியல் தீர்வு அல்லவென்றும் அரசு எடுத்துக்காட்டியுள்ளது.

16.11.91 (வீ) 0000000000000 யாழ்ப்பாண மாவட்ட சுயேச்சைக்குழு சார்பில் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள 9 உறுப்பினர்களும் தாம் பாராளுமன்றம் வரத் தேவையான பாதுகாப்பு, பிரயாண. வதிவிட வசதிகளைச் செய்து தருமாறு பிரேமதாசாவிடம் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

வடபகுதியில் வருமானம் இழந்துள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்களுக்கு மீண்டும் தொழில் செய்ய வழியேற்படுத்தித் தருமாறு அரசைக் கோரி யாழ் நகரில் ஊர்வலம் நடத்தினர்.

கல்முனை அகதிமுகாம். காரைதீவு அகதிமுகாம் ஆகியவற்றைச் சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் அங்கு வசித்து வந்தவர்களில் 28 அகதிகளைக் கொண்டு சென்றுள்ளனர்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

17.11.91 (வீ) 000000000000
யாழ்குடா நாட்டில் இராணுவ முற்றுகையினால் சுமார் 10 இலட்சம் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். இம் முற்றுகையினால் குடா நாட்டுக்கும், வெளியுலகுக்கு மான தொடர்புகள் முற்றாகத் தடைப்பட்டுள்ளன. எல்லா உணவுக் களஞ்சியங்களும் வெறுமையாகவேயுள்ளன.

18.11.91 (வீ) 0000000000000
சட்ட மாணவர்கள், சட்ட விரி வுரையாளர்கள், வழக்கறிஞர் களுக்கு மிகத் தேவைப்படும் அவர்கள் பயன்படுத்தக் கூடிய புதிய சட்ட அறிக்கைகள், ஸ்ரீலங்காச் சட்ட அறிக்கை கள் எதுவும் இதுவரை தமி ழில் வெளியிடப்படவில்லை.

அம்பாறையில் 5 பெண்களைக் கடத்திச்சென்ற புலிகள் அவர்



களை விடுவிக்கத் தலா 5 இலட்சம் ரூபா தரவேண்டு மென அறிவித்துள்ளனர்.

20.11.91 (வீ) 0000000000000
பிரதேச பல்கலைக்கழகங்கள் தோற்றுவிப்பது தொடர்பான தீர்மானத்தின்போது பல்கலை க்கழக ஆசிரியர்கள், மாண வர்களின் கருத்துப் பெறப்பட வில்லை. இதனால் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகளைச் சமாளிக்கும் பொருட்டு அனை த்துப் பல்கலைக்கழக வளவுக ளைச் சுற்றியும் பலத்த பொலிஸ் காவல் போடப்பட் டுள்ளது.

23.11.91 (வீ) 000000000000
பொருளாதாரத்தடை, பட்டி னிச்சாவு, வறுமைக் கொடு மை ஆகியவற்றை நீக்கக் கோரி இரண்டாவது முறை யாக யாழ்நகரில் இரண்டு ஊர்வலங்கள் நடாத்தப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

25.11.91 (வீ) 000000000000 நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதாரத்தை விருத்தி செய்யத் தவறிய அரசாங்கம் இங்குள்ளோரை வெளிநாடுகளுக்கு அனுப்பியும், உல்லாசப் பிரயாணம், விபச்சாரம் முதலியவற்றை விருத்தி செய்தும் பணம் சம்பாதிக்க எடுக்கும் முயற்சிக்கு ஊன்றுகோலாக புதிய பல்கலைக்கழகக் கல்லூரிகளை அமைக்கிறது. தற்போதைய பல்கலைக்கழகங்களின் பராமரிப்புக்கென ஒதுக்கப்பட்ட 20 கோடியைப் பயன்படுத்தி இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளை ஆரம்பித்து அவற்றில் உடல் பிடித்துவிடல்(மஸாஜ்), விளம்பரத்துக்குப் போஸ் கொடுத்தல் (மொடல்) போன்ற துறைகளில் கல்வி புகட்டி விபச்சாரத்தை ஊக்குவிப்பதும், நாட்டின் கலாச்சாரத்தைச் சிதைப்பதுவுமே இம் முயற்சியின் விளைவாகும்.

புலிகளுடன் பேச்சு நடக்குமானால் இதுவரை காணப்பட்ட இராணுவ வெற்றிகளுக்கு என்ன நேரப் போகிறது? இராணுவத்தின் நிலை என்ன? ஏனைய தமிழ்க் குழுக்களை எவ்வாறு கையாள்வது? போன்ற சிக்கலான பெரிய பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். தற்போதைய நிலையில் இராணுவ நடவடிக்கையைத் தவிர பெருமளவிற்கு வேறு மாற்றுவழி இருப்பதாகத் தெரியவில்லை - லலித்

யாழ்ப்பாணத்தில் போஷாக்கில்லாத குழந்தைகள் சமுதாயம் ஒன்று உருவாகிறது. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்கால இளைஞர் சமுதாயம் வலுக்குறைந்த, போஷாக்கில்லாத, ஊனச் சமுதாயமாகவே இருக்கும்.

27.11.91 (வீ) 000000000000 அடுத்த வெசாக் போயா தினத்தில் பாராளுமன்றக் கட்டிடத்தில் பௌத்த கொடியை ஏற்றவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் நான் அக் கொடியை ஏற்றிவைப்பேன் - சு.க. எம்.பி.

பசறை கனவரல்ல தோட்டத்திற்கு இலக்கத் தகடற்ற வாகனத்தில் வந்த ஆயுதபாணிகள் தொழிலாளர்களின் குடியிருப்புக்குள் புகுந்து தாக்கியுள்ளனர்.

600க்கு மேற்பட்ட பௌத்த பிக்குமார் இன்றுவரை மர்மமான முறையில் காணாமற் போயுள்ளனர்.

மூன்றாம் உலகநாடுகளில்

www.tamilarangam.net

வறுமையான எமது நாடு அறிவுத்துறையில் உச்சநிலையை அடைந்துள்ளது. முன்னொரு காலப்பகுதியில் தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற விளைபொருட்களை உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை நாம் பெற்றோம். இன்று அந்நிலைக்கு அப்பாற்பட்டு எமது மதிநுட்பத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து பணம் சம்பாதிக்க வழி பிறந்துள்ளது - மத்திய மாகாண முதலமைச்சர்

திருமலை மாவட்டத்தில் தமிழ், முஸ்லீம் மக்கள் இன்று அகதிகளாக முகாம்களில் தங்கியிருக்கையில் புதிய குடியேற்றத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இது இனங்களுக்கிடையில் பிரச்சினையை உருவாக்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

28.11.91 (வீ) 000000000000 அம்பாறை மாவட்டத்தில் விஷேஷ அதிரடிப்படையினரால் 60 பேர் கைதுசெய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சாட்சியங்கள் ஒழுங்கு செய்த கிராம சேவகர் விஜயரத்தினம் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களிலிருக்கும் மக்களை இராணுவத்தினர் தங்களது வேலைகளைச் செய்வதற்கென அழைத்துச் செல்கின்றனர். மறுக்குமிடத்து அம் மக்கள் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்திலும், ஏனைய சில தமிழ்ப் பகுதிகளிலும் இருந்து அச்சுறுத்தல் காரணமாக வெளியேறிய மக்களின் நெற்காணிகளில் இராணுவத்தினர் பயிர் செய்துவருகின்றனர்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. பொத்துவிலில் 60 சிங்களமினவர் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் எச் சிறையில், முகாமில் வைக்கப்பட்டுள்ளார்கள் என அரசு தெரியப்படுத்தாமல் மறைத்து வைத்திருப்பதால் பெரும் பணத்தைச் செலவழித்தும், நகைகளை அடகு வைத்தும் தங்கள் பிள்

www.tamilarangam.net

ளைகளை. உறவினர்களை பார்க்கவரும் அப்பாவி மக்கள் பெரும் அல்லலுக்குள்ளாகின்றனர்.

அக்கரைப்பற்று பகுதியிலுள்ள நெல் குத்தும் ஆலைகள் கடந்த 1 வருடத்திற்கும் மேலாக மூடி இருப்பதனால் அவற்றில் தொழில் பார்த்துவந்த சுமார் 1.300 தொழிலாளர்கள் மிகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

29.11.91 (வீ) 0000000000000 பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த தோட்டங்களில் கடந்த 26ஆம் திகதியிலிருந்து சந்தேகத்தின் பேரில் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண்களும் அடங்குவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடுகளில் வந்து இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்படும் அப்பாவி இளைஞர்கள் ரயர்களுக்கு இரையாகி வருகின்றனர். அண்மையில் மண்டூரில் 13ஆம் கொலனியில் வீடுகளிலிருந்த அப்பாவிப் பொதுமக்கள் சுடப்பட்டு, ரயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களைவிட தற்போது இராணுவ நடவடிக்கைகள் அப்பாவிகள் மீது கடுமையாக எடுக்கப்படுகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலமா அல்லது இராணுவத் தீர்வின் மூலமா வட-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்கு எப்போதுமே தயாராக இருக்கிறார்கள். அரசாங்கம் அவ்வாறு பேச்சுவார்த்தை நடாத்த முன்வருமானால் புலிகளும் பேச்சுவார்த்தை நடாத்த முன்வருவர் -பிரபாகரன்

மில்லவான அரச தோட்டத்தில் இயங்கிவரும் பாடசாலையில் கல்வி பயின்று வரும் 62 பிள்ளைகளில் 52 பிள்ளைகள் அத் தோட்ட தமிழ்த் தொழிலாளர்களின் பிள்ளைகளே. ஆனால் இவர்களுக்குத் தமிழ் போதிக்க ஒரு தமிழ் ஆசிரியர் தானும் நியமிக்கப்படவில்லை.

சுமார் 250 பிள்ளைகள் கல்வி பயின்றுவரும் பிட்டகந்த அரச தோட்டப் பாடசாலையில் போதிய இடவசதியில்லாத காரணத்தினால் நான்கு வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 150 பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியிலிருந்து கல்வி பயின்று வருகின்றனர்.

www.tamilarangam.net

# பச்சை பனைமட்டையும், தமிழீழமும்



புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு, வதை முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு, மிருகத்தனமான சித்திரவதைகளை அனுபவித்து, அங்கிருந்து தப்பி வந்தவரின் வாக்குமூலம் ஈழத்திலிருந்து எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புலிகளின் மறுபக்கமான பாஸிஸத்திற்கு இன்னோர் சாட்சியமாக இவ் வாக்குமூலம் இங்கு பிரசுரமாகிறது.

நான் ரெலோ இயக்கத்தில் உறுப்பினராக இருந்து எனது சொந்த காரணங்களுக்காக இந்தியப்படையினர் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் ரெலோ இயக்கத்தில் இருந்து வெளியேறினேன். பின்னர் ஒரு வாகனம் வாங்கியிருந்தேன்.

25.06.1990ஆம் திகதி பகல் 12 மணியளவில் பிளவ்ஸ் கடையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது ஆயுதம் தாங்கிய இருவர் நான் சாப்பிட்டுக்கொண்டிருந்த இடத்திற்கு வந்து பொன் மாஸ்ரர் தன்னை வந்து சந்திக்கும்படி கூறியதாகக் கூறி என்னை அழைத்துச் சென்றனர். என்னைப் பொன் மாஸ்ரர் முகாமில் விட்டுவிட்டு ஆரியகுளத்தடியில் நின்ற என்னுடைய வானையும் எடுத்துவந்து முகாமில் விட்டனர். நான் முதல்நாள் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்றதால் இரவு நித்திரை இல்லை.

www.tamilarangam.net

எனவே பொன்மாஸ்ரர் வரும்வரை நான் எனது வாகனத்தில் நித்திரை கொள்வதாகக் கேட்டேன். அப் போது நேரம் பி.ப. 2 மணி. அவர் கள் அனுமதி பெற்று நித்திரை கொண்டேன். மாலை 5 மணிக்கு பொன் மாஸ்ரர் வந்துவிட்டதாகக் கூறி என்னை எழுப்பினர்.

பொன் மாஸ்ரர் என்னை அழை த்து " உங்களை ஒருவர் சந்திக்க வேண்டும்" அவர் வரும்வரை இரு ங்கள் " எனக் கூறி ஓர் அறையில் கதிரை ஒன்றைப் போட்டு இருக்க விட்டார். இரவு 7 மணிவரை என் னைச் சந்திக்க ஒருவரும் வரவி ல்லை. எனவே நான் எனது வீட்டு க்கு போய்விட்டு நாளை வருகி றேன், வாகனம் இங்கேயே நிற் கட்டும் என அவர்களிடம் கேட் டேன். அவர்கள் அனுமதிக்க வில்லை.

9 மணிக்கு என்னைக் கூட்டிச் சென்று ஒரு அறையில் படுக்கவிட் டார்கள். நான் படுத்துவிட்டேன். 11 மணிக்கு என்னை எழுப்பி உணவு தந்தார்கள்.

மறுநாள் 26ஆம் திகதி காலை எழுப்பி முகம் கழுவும்படி கொண்டு போய் விட்டார்கள். 8 மணி இருக் கும். வெள்ளை வானில் வந்த உயர் ந்த ஒருவர் பொன் மாஸ்ரரிடம் பேசிவிட்டு " டேய் வாடா" என்று என்னை அழைத்து தான் கொண்டு வந்த வானில் ஏற்றி, குப்புறப் படு க்கும்படி கூறினார். நான் வானில் ஏறும்போது வானில் வேறு ஒரு வாலிபனும் குப்புறப்படுத்தபடி இரு ந்தார். நானும் அவருக்குப் பக்கத் தில் குப்புறப்படுத்தேன். வான் புற ப்பட்டு சுமார் 15 நிமிடங்களின் பின்னர் ஓரிடத்தில் நின்றது.

வான் நின்ற இடத்தில் ஒரு அழகான மாடி வீடு. அந்த வீட்டின் ஓர் அறையில் என்னை விட்டுப் பூட்டினர். அந்த வீட்டில் 10 அறை கள் இருப்பதை நான் உள்ளே நுழையும்போது அவதானித்தேன். என்னை விட்டுப் பூட்டிய அறையில் மேலும் 15 பேர் இருந்தனர்.

நான் அறைக்குள் விடப்பட்டு சுமார் 2 மணி நேரம் வரை அந்த அறையிலிருந்த எவருமே என்னு டன் பேசவில்லை. நானே முதலில் அவர்களுடன் பேசத் தொடங்கி னேன். " நீங்கள் எப்போது பிடிக் கப்பட்டீர்கள்?" என அவர்களை வினவினேன். அவர்கள் 5 முதல் 10 நாட்கள் வரை பல மாதிரி கூறி னர். " எந்த இடத்தில் இருக்கி றோம்?" எனக் கேட்டேன். அவர் கள் தமக்கு இடம் தெரியவில்லை எனவும், அடிக்கடி கோவில் மணி யோசை கேட்பதாகவும் கூறினர். அந்தக் காலத்தில் நல்லூர்க் கோவில் திருவிழா நடைபெற்ற தாலும், அடிக்கடி மணியோசை கேட்டதாலும் நாம் அடைக்கப்பட்ட


www.tamilarangam.net

இடம் நல்லூர்க் கோவிலுக்கு கிட்டிய இடம் என உணர்ந்து கொண்டேன்.

பி.ப. 3 மணி இருக்கும். 15 வயதுடைய பையன் துப்பாக்கியுடன் வந்து " சிறுநீர் கழிக்கப் போகிறீர்களா?" எனக் கேட்டு இருவர் இருவராகக் கூட்டிச் சென்றார். அப்போது "யாராவது தப்பியோட முயன்றால் தலை பறக்கும்" என எச்சரித்தார். அந்த வீட்டில் புலி இயக்கத்தைச் சேர்ந்த 50 பேர் வரை இருந்தனர். 5 மணிக்கு ஒருவர் வந்து என்னை அழைத்துச் சென்றார். அந்த அறையில் என்னை அழைத்து வந்த உயரமானவர் இருந்தார்.

என்னைக் கண்டதும் " டேய் யாரிடம் நீ வான் வாங்கினாய்? உனது றைவர் எங்கே?" என்று கடுமையாகக் கேட்டார். நான் வாங்கிய நபரின் பெயர், முகவரி, வாங்கிய விலை போன்ற விபரங்களைக் கொடுத்தேன். பின்னர் நான் முன்னர் இருந்த இயக்கம், எனது றைவரின் பெயர், வீட்டு விலாசம் ஆகிய அனைத்து விபரங்களையும் அவர்கள் கேட்டு நான் கொடுத்தேன். அதன் பின்னர் "எங்கேயடா இவ்வளவுநாளும் மாட்டுப்படாமல் இருந்தனீங்கள்?" என்று கூறி பெரிய கொட்டன் தடியால் அடித்து விட்டு பழைய அறையில் மீண்டும் அடைத்து வைத்தனர்.

27ஆம் திகதி காலை சுமார் 8 மணியிருக்கும். முன்னர் என்னை அந்த இடத்திற்குக் கொண்டு



www.tamilarangam.net

சென்ற உயரமானவர் வந்து எனது வாகனத்திலேயே என்னை ஏறிக் குப்புறப் படுக்கும்படி கூறினார். நான் சீற்றுக்கு இடையே குப்புறப் படுத்துவிட்டேன்.

10 நிமிட பயணத்தின் பின்னர் என்னை எழுந்திருக்கச் சொன்னார். அப்போது வாகனம் யாழ் ஸ்ரான்லி வீதியில் சென்றுகொண்டிருந்தது. றைவரின் வீட்டைக் காட்டும்படியும் விசாரித்துவிட்டு விடுவதாகவும் கூறினார். றைவரின் வீடு மல்லாகத்தில் இருப்பதாகக் கூறி அவர்களைக் கூட்டிச் சென்று வீட்டைக் காட்டினேன். என்னை வாகனத்தில் இருக்கும்படி கூறிவிட்டு றைவரை அவருடைய அக்காவிடம் விசாரித்தனர். அங்கு றைவர் இல்லாததால் அவர் வந்ததும் பொன் மாஸ்ரரின் முகாமுக்கு வரும்படி கூறிவிட்டுப் புறப்பட்டனர். வேறு எந்த இடத்திற்கு றைவர் போவான் என்று கேட்டனர். யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள இன்னொரு அக்காவின் வீட்டைக் காட்டினேன். அங்கும் அவர் இல்லாததால் முகாமுக்கு வரும்படி கூறிவிட்டு வந்தனர். பல்கலைக்கழகத்துக்கு இடையே வாகனம் வந்ததும் மீண்டும் என்னைக் குப்புறப் படுக்கும்படி கூறி பழைய வீட்டுக்கே கூட்டிச் சென்றனர்.

28ஆம் திகதி றைவரையும் அதே மாடி வீட்டுக்குக் கொண்டு வந்தனர். "இவன் உன் றைவரா?" என என்னைக் கேட்டனர். நான் "ஓம்" என்றதும் இருவருக்கும் அடித்தார்கள்.

29ஆம் திகதி காலை 10 மணியளவில் 2 பேரையும் கண்ணைக் கட்டிக்கொண்டு போய் வேறு ஒரு வீட்டில் விட்டார்கள். அந்த வீடு பழைய கட்டிடம். ஆனால் அங்கும் பல அறைகள் இருந்தன. எங்களைக் கொண்டு சென்று வீட்டுக் காவலில் இருத்தினர். அங்கே 15 முதல் 18 வயதுக்கிடைப்பட்ட 10 பேர் நின்றனர். எல்லோரிடமும் பொல்லு இருந்தது. அவர்கள் "எங்களை எந்த இயக்கம்?, எந்த ஊர்?, என்ன குற்றம் செய்தீர்கள்?" எனக் கேட்டு, எங்களுடைய உடைகளைக் கழட்டி சாரத்துடன் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அடைத்தனர்.

10 அடி நீளம், 10 அடி அகலம் உள்ள அந்த அறைகளில் 30 பேர் வரை அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒரு மாதம் தொடக்கம் 2 மாதத்திற்குள் கொண்டு வந்து அடைக்கப்பட்டவர்கள் எனத் தெரிய வந்தது. அவர்களுடன் கதைத்தபோது அவர்கள் என்னை உள்ளதைச் சொல்லிவிடும்படியும், இல்லையெனில் இறைச்சிக்கடைக்கு கொண்டு போவார்கள் எனவும், அங்கே போனால் உயிருடன் திரும்ப முடியாது எனவும் கூறினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2ஆம் திகதி 11 மணியளவில் "டேய் யாரடா றெலோ ரா---" எனக் கேட்டவாறு கதவுகளில் அடித்துக்கொண்டு வந்தார்கள். நான் அந்த வீட்டுக்குப் போன அன்றே எனக்குக் கைதி இலக்கம் தரப்பட்டுவிட்டது. ஆனால் என்னைப் பேரைச் சொல்லிக் கூப்பிட்டு ஒரு தூணில் கட்டினர். அங்கே றைவர் நிர்வாணமான நிலையில் அடி காயங்களுடன் நிலத்தில் பேச்சு மூச்சின்றிக் கிடத்தப்பட்டிருந்தார். என்னைத் தூணில் கட்டியதும் "டேய் றைவர் செத்துவிட்டான். நீயும் சாகப் போகிறாய். உள்ளதைச் சொல்" என்று கூறி 4 பேர் என்னைப் பொல்லால் அடித்தார்கள். இந்த நால்வருக்கும் வயது 15க்கு மேல் இருக்காது. அவர்கள் என்னிடம் "டேய் நீ எந்த இயக்கம்? யாரைக் காட்டிக் கொடுத்தாய்? ஆயுதம் எங்கே வைத்திருக்கிறாய்? எத்தனை பேரைச் சுட்டாய்? எத்தனை வீடு கொள்ளையடித்தாய்?" என்று கேட்டு அடித்தார்கள். நான் ஒன்றிலும் ஈடுபடவில்லை எனக் கூறினேன். அவர்கள் நான் மயங்கும்வரை அடித்தார்கள்.

3ஆம் திகதி காலை என்னைக் கூப்பிட்டார்கள். "றைவர் எல்லாம் சொல்லிவிட்டான். நீயும் உண்மை சொல்கிறாயா? அல்லது அடி வாங்கிச் சாகப் போகிறாயா?" எனக் கேட்டு எனது வாய்க்குள் பெரிய கட்டையை ஒட்டினார்கள். ஒருவன் ஒட்ட மற்றவர்கள் சிரித்தார்கள். இப்படிச் சித்திரவதை செய்து எனது முகவரி, தாய், தந்தை, அவர்களுடைய சகோதரங்கள், அவர்களுடை பிள்ளைகள், தாய் வழி, தந்தை வழி... போன்ற விபரங்கள் அனைத்தும் கேட்டனர். நான் பிறந்த திகதி, படித்த பாடசாலை, இயக்கத்தில் நான் செய்த பணிகள் இயக்கத்தில் இருப்பவர்கள் பெயர்கள். ஏனைய இயக்கத்தில் உள்ளவர்கள் பெயர்கள் போன்ற விபரங்கள் கேட்டு சுமார் 30 பக்கங்களில் வாக்குமூலம் எடுத்தனர். வாக்குமூலம் எடுத்தவர் திருமலையைச் சேர்ந்த கௌதமன் என்பவர்.

அந்தச் சிறையில் இருந்தபோது காலை, மாலை மல, சலம் கழிக்க வெளியே விடுவார்கள். ஏனைய நேரங்களில் அடிக்கடி வந்து 15 வயதுச் சிறுவர்கள் பொல்லால் அடிப்பார்கள்.

10ஆம் திகதி " சங்கிலி போடாதவர்கள் எல்லாம் வா" என எல்லா அறைகளிலும் இருந்தவர்களையும் அழைத்துச் சென்றனர். அங்கு இருந்தவர்களில் 36 பேருக்கு சங்கிலி போடவில்லை. அனைவரையும் வரிசையாக நிற்கும்படி கூறிக் கண்களைக் கட்டினார்கள்.

10 பேராக வாகனத்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டு ஓரிடத்தில் இறக்கப்பட்டோம்.

www.tamilarangam.net



அங்கு 6 குண்டுகள் போடப்பட்ட லொறிச் சங்கிலியைக் காலில் போட்டு காஸ் மூலம் ஒட்டினார்கள். பின்னர் 3 மணியளவில் பழைய இடத்திற்குக் கொண்டு சென்றார்கள்.

மாலை 35 பேரையும் வரிசையாக இருக்கவிட்டு கண்களைக் கட்டினார்கள். ஒரு மணி நேரத்தின் பின்னர் அலுமினியம் பொடி அடித்த வானில் ஒருவர் சாரத்தை ஒருவர் பிடித்தபடி சென்று ஏறும்படி ஏற்றி வேறு இடத்திற்குக் கொண்டு சென்றனர். வான் சுமார் 2 மணி நேரப் பயணத்தின் பின் ஓரிடத்தில் நின்றது. வான் ஓடிய வேகத்திலும், நேரத்திலும் இருந்து நாம் முன்னர் இருந்த இடத்திலிருந்து 20 மைல் தூரத்திற்கப்பால் வந்துவிட்டோம் எனத் தீர்மானிக்க முடிந்தது.

வான் நின்றதும் எல்லோரையும் இறங்கும்படி ஒருவர் கூறினார். அப்போது "இந்தச் சனியன்களுக்குச் சங்கிலி இருக்கா?" என ஒருவர் கேட்க, "ஓம்" என இன்னொருவர் பதிலளித்தது கேட்டது. அதே நேரம் நாம் ஒவ்வொருவரும் இறங்க, இறங்க பச்சைப் பனை மட்டையால் ஒவ்வொரு அடி விழுந்தது. பின்னர் ஒருவரை ஒருவர் பிடிக்கும்படி கூறினர். எங்களை ஒரு வீட்டின் படியால் ஏறச் சொன்னார்கள். படிகளில் ஒவ்வொருவரும் ஏற, ஏற அடி விழுந்தது. "போடா உள்ளே" என்று கூறி அவர்கள் சிரித்தார்கள்.

*( மிகுதி அடுத்த கலத்தில்)*

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

வாசகியிவள்
எழுதும்
கோபக் கடிதம்.
இதன் மூலம்
நான் விடும் தூது அல்ல.
வேண்டுகோள்.
தனக்கென்று
சிலரை வைத்து விளையாட
அனுமதிக்கும் — நீ
ஏன்
உன் மற்றைய வாசகர்களை - வெட்டி
புறக்கணிக்கிறாய்?
வளர்ந்துவிட்டவரைத்தான் - நீ
தினம் ஆதரிக்கின்றாய்
என் போல் வளர்பவரை
வெட்டி வீழ்த்துகின்றாய்.
சிறியவர் இவர்கள் என
நாம் எழுதும்
எண்ணக்கிடக்கைகளை
பாராமுகம் கொண்டு
குப்பைக்குள் கொட்டிவிட்டு
மற்றைய வளர்ந்துவிட்டவரைத்தான்
நீ கூட ஆதரிக்கின்றாய்.
தூண்டிலே நீயும் விதிவிலக்கல்ல.
நீ வளர்ந்தவரையும் ஆதரி.
அத்தோடு
எம்மையும்
கொஞ்சம் திரும்பிப் பார்
அல்லது
முளையிலேயே கருகிவிடுவோம்.

- பி.ஆர்.ரஞ்சனி

எமக்கென்று வைத்து
சிலரோடு விளையாட
இது தாயம் அல்ல!
நாம் வைத்திருப்பது
நபர்கள் அல்ல,
கருத்துகளே.
வளர்ந்துவிட்டவரை மட்டும்

www.tamilarangam.net

ஆதரிக்கவில்லை.
எமது வளர்ச்சியும்
இன்னமும் போதவில்லை.
கருக வேண்டாம்.
வரலாற்றைத் தடுப்பன தவிர்ந்த
ஏனையவை
வந்த ஒழுங்கின்படியும்
சமகால முக்கியம்படியும்
பிரசுரமாகும்.

— க.

*

நாட்டையே சூறையாடிய ஒரு ஊதாரியும், பீரங்கித் திருடனும், ஏகாதிபத்திய அடிவருடியும், கொலைகார பாஸிஸ்ட்டுமான ஒரு நபர் இப்படிச் சாகடிக்கப்படுவது பொருத்தமானதுதான். அதைக் கண்டிப்பதோ, அதற்காக அனுதாப்படுவதோ அவசியமில்லை. அதே வேளையில், ஒரு தனிநபரைக் கொன்றுவிடுவதன் மூலம் அவர் சார்ந்த அமைப்பையோ, அதன் வர்க்கத்தன்மையையோ மாற்றிவிடமுடியாது. அவ்வமைப்பை அம்பலப்படுத்தி, பரந்துபட்ட மக்களை அரசியல் படையாகத் திரட்டி மட்டுமே ஒழிக்க முடியும் என்பது வரலாற்று அனுபவமாகும்.

" சொந்தநாட்டு மக்களைக் கொன்று இரத்தம் குடித்த காட்டேரிதான் ராஜீவ்காந்தி. சொந்த நாட்டையே சூறையாடியவர். பஞ்சாப், அஸாம் மாநிலத்து மக்கள், ஈழத் தமிழர்கள் - இப்படி தனது உயிருக்கு குறிவைக்கும் பல கொலைகாரர்களை உருவாக்கிக் கொண்டவர். அதனால் அவர் திட்டமிட்டுக் கொல்லப்படலாம் என்று எதிர்பார்த்ததுதான். எனவே வசீகரமானவர், இளையவர், இனிமையானவர், அன்புக்குரிய தலைவன் கொடியவர்களின் குண்டுக்கு இரையாகிவிட்டார் என்று குட்டிமுதலாளித்துவக் கூட்டம் புலம்புவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்." (புதிய ஜனநாயகம்)

புதிய ஜனநாயகம் குழுவினர் பகத்சிங் இளைஞர் முன்னணி அமைத்துக் கொண்டிருக்கிறார்களோ? இல்லையோ? புரட்சிக்கான தேவையை உணர்த்தும் சரியான தளத்தில் நிற்கிறார்கள். அவர்கள் ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்காகவும், இந்தியாவிலுள்ள அகதிகளுக்காகவும் குரல் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன? என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அகதிகளைப் திருப்பியனுப்ப பார்ப்பனியம் வரிந்துகட்டி நிற்கும் போது அதை எதிர்த்து போராட்டங்களில் ஈடுபட்டு, NSA சட்டத்தினால் சிறைக்கம்பிகளுக்குப் பின்னே சித்திரவதைப்படும் அத் தோழர்களின் உணர்வுகளை நாம் கணக்கில் கொள்ளவேண்டும். சஞ்சிகையை அடிப்பதற்கான அச்சகம் தடுக்கப்படுவதன் தார்ப்பரியம் என்ன? என்

www.tamilarangam.net

பதற்கான பதிலையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

வெறுமனே அனைவருமிங்கிருந்து குறைகூறுதல் பொழுதைப் போக்கும் தவிர்க்கமுடியா அம்சமெனில் உமாவுக்கும், பத்மநாபாவுக்கும் சிறீசபாவுக்கும் செய்யாத அஞ்சலியைச் செலுத்திக்கொள்ளலாம்.

கொலைக்கு கொலை தீர்வல்ல. ஆனால் பகத்சிங் கூட பல கொலைகள் செய்தவர்தான். அதற்கு அவர் சொல்வது. "தவிர்க்க முடியாத போதே நாங்கள் மனித உதிரத்தைச் சிந்த வைக்கிறோம். இதற்காக நாங்கள் எவ்வளவோ வருந்துகிறோம்" என்பதே. அதைத்தான் பனிமலர் அனந்தனும் சொல்கிறார். அதாவது புலிகள் இந்தக் கொலையைக் கண்டித்திருந்தால், அவர்கள் மனிதத்தன்மையுள்ளவர்கள். ஒரு விடுதலை இயக்கத்தை சரியாக வழிநடத்தக்கூடியவர்கள் யார்? புலிகள்!. நாளை அவர்கள் கண்டிப்பார்கள். அதன்பின்பு நீங்கள் எல்லோரும் சேர்ந்து நிதி திரட்டிக் கொடுங்கள்.

பகச்சிங்கும், புலித்தலைமைகளும் ஒன்றல்ல. பகத்சிங் வாழ்ந்த காலமும், இன்றைய உலகமும் ஒன்றல்ல. அஸாம் மக்கள், பஞ்சாப் மக்கள், ஈழமக்கள், விஷவாயுவால் பாதிக்கப்பட்ட போபால் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற தற்காலச் சூழலும் நாம் வாழும் இம் மேற்குலகச் சூழலும் ஒன்றல்ல.

சமூகத்தை வெட்டிக் குதறி ஆத்திரத்தையும், அழுகையும் மட்டுமே பரிசாகத் தந்த பாஸிஸ்ட்டுகளின் மறைவுக்கு ஏன் கண்ணீர் சிந்தவேண்டும்.

ராஜீவ், ரஞ்சன் இடத்தில் புதியவர்கள் வந்திருக்கிறார்களே. அவர்களை என்ன செய்யலாம்? மானிட மதிப்பீடுகள் உயர்ந்தவை என்பதால் தொடர்ந்து பிணம் தின்ன விட்டுவிடலாம். முழுமையாக இந்தச் சுரண்டல் அமைப்பை உடைத்துத் தூளாக்குமட்டும் அவர்களைத் தின்ன அனுமதிப்போம். ஆனால் அவர்களின் சுரண்டலுக்குப் பலியாகும் மக்களைப் பற்றிய மானிட மதிப்பீடுகளில் எமக்குள் முதன்மையில்லை. ஏனெனில் பெரிய தலைகள் உருளும்போது தான் நாம் எதையுமே தூக்கிப்பிடிக்கிறோம்.

"புரட்சி உலகத்தின் விதி. அதற்கு ரத்தம் தோய்ந்த போராட்டம் தவிர்க்க முடியாததே. வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், ரத்தக்களரி முதலியவை புரட்சியின் அங்கங்கள் தான். ஆனால் புரட்சியின் உண்மையான வலு சமுதாயத்தைப் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மாற்ற வேண்டுமென்னும் மக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளின் தீவிரமான விருப்பமே ஆகும். தனிநபர்களைக் கொலை செய்வது மட்டும் புரட்சியின் நோக்கமல்ல. மனிதனை மனிதன் சுரண்டிக் கொள்ளையடிக்கும் முறையை முடிவுக்குக் கொண்டுவந்து, நம் நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெறுவதே புரட்சியின் நோக்கமாகும்..(பகத்சிங்)

பாஸிஸ்டுகள் சாகும்போதும் தங்களுக்கே உரிய மரபை தங்கள் பங்காளிகளுக்கு விட்டு விட்டுச் செல்கிறார்கள். ஆம் அவர்கள் தங்களைப் போலவே தங்கள் கூட்டாளிகளையும் மரணபயத்தில் ஆழ்த்திவிட்டுச் செல்கிறார்கள். ஆதலால் உறிஞ்சும் இந்தச் சுரண்டல் அமைப்பில் பாஸிஸ்டுகள் கொலை செய்யப்படுவது தவிர்க்க முடியாததே. ஆனால் சதாமைத் தண்டிக்க புஷ்ஷுக்கு என்ன அருகதை என்பதே முதன்மைக் கேள்வி, மற்றும்படி, மனிதாபிமானம் பற்றி அருகில் உள்ள புதிய நாஸிகளிடம் கேட்டுப் பார்ப்போம்.

- சம்பரி

*

இன்றைய உலகே இரண்டு பெரும் வர்க்கப் பிரிவினைகளைத் தம்முள் கொண்டு வர்க்கங்களாகப் பிளவுண்டிருப்பது நாம் அறிந்ததே. இவ்வாறான இவ்வுலகிலே ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பக்கத்தைச் சார்ந்தவராகவே, ஒரு வர்க்கத்தின் உறுப்பினராகவே வாழ்கின்றார். ஒவ்வொரு சிந்தனையிலும், செயற்பாட்டிலும் விதிவிலக்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றி ஒரு பக்க (வர்க்க) முத்திரை குத்தப்பட்டிருப்பது தெரியும். 'மனிதத்துவம்' மரணித்துப்போன வர்க்கப் பகைமைகள் கூர்மையடைந்திருக்கும் இச் சூழலில் எந்தவொரு பிரச்சினை எழும்போதும் அதைச் சமூக விஞ்ஞான ரீதியிலான கண்ணோட்டத்துடன் ஜனநாயக மத்தியத்துவம் பேண வேண்டியதும், அணுக வேண்டியதும்தான் எம் ஒவ்வொருவரினதும் கடமையாகவிருக்கும். சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் எனும்போது ஒடுக்கப்படுகின்ற பெரும்பான்மை மக்கள் சார்ந்த மனிதாபிமானமாகவே அது இருக்கும். இன்று சமூகத்தில் நிலவும் எந்த ஒரு பிரச்சினைக்கும் அடிப்படைக் காரணம் வர்க்க முரண்பாடுகளே. (இன முரண்பாடுகளாயினும் சரி அல்லது வேறெதுவாக இருப்பினும் சரி) வர்க்க முரண்பாடுகளால் பிளவுண்டிருக்கும் இச் சமூகத்திலே, இவ்விரண்டு பக்கங்களையும் சாராது இடையே நின்று 'பொது மனிதாபிமானம்' பார்ப்பவர்களோ அல்லது அது பற்றிப் பேசுபவர்களோ எதிரியை இனம் கண்டு எதிர்த்துத் தூக்கியெறியாமல் இருக்கின்ற 'மேலான வேலைக்காரரை' நேசித்து கொடுக்குடனும், கைத்தடியுடனும் மக்களின் ஆயுத எழுச்சிக்கு தடையாகவிருந்த காந்தியைப் போலவோ அன்றில் சாராம்சத்தில் 'முதலாளிகட்கும், தொழிலாளிகட்கும் இடையே ஏற்படும் சச்சரவுகளில் தலையிட்டுத் தீர்த்து வைக்கும் உரிமை பொதுமக்களிற்கு வேண்டும்.' என்று செயற்பட்ட அண்ணாதுரை போன்ற வர்க்க சமரசவாதிகளின் கருத்தையோ தான் ஏற்றுள்ளனர் என்ற நிலைக்கே வரமுடியும். மேலோட்டமாகப் பார்க்கும்போது 'பொது மனிதாபிமானம்' சரியாகச் சிலரிற்குப்படினும், இப்பொது மனிதாபிமானது மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து ஒடுக்கும் வர்க்கத்திற்கே துணைபோய் விடுகின்றது.

'இந்தியாவிலும், துணைக்கண்டங்களிலும் முற்றிவிட்ட ஆழமான சமூக பொருளாதார நெருக்கடிகளின் விளைவே' ராஜீவின் கொலை.

எந்தவொரு தனிமனித கொலைகளும் மக்களின் நிரந்தர விடியலிற்கு வழிசமைக்கமாட்டாது. தனி மனிதக் கொலைகளையோ, தனி நபர்களிற்கு எதிரான தாக்குதல்களையோ ஆதரிப்பவர்களோ, இதை முன்னின்று செய்பவர்களோ அல்ல ஜனநாயக சக்திகள். மனிதனை மனிதன் கூறுபோடும் யுத்தங்களையும், கொலைகளையும் நாம் விரும்பவில்லை. அதை ஒழிப்பதற்காகவே வாதாடுபவர்கள். ஆனால் இந்நிலையை உருவாக்கியவர் யார்?

மனித நாகரிகமறியாக் காலத்தில் வாழ்ந்த மனித சமூகங்கள்

www.tamilarangam.net

கூட்டாக வேலை செய்து கிடைப்பதைக் கூட்டாக உண்டனர். நாளடைவில் 'மேலதிக உற்பத்தி' என்பது என்று தோன்றி அம் மேலதிக உற்பத்தியை அபகரிக்க ஒரு சாரார் எழுந்தனரோ அன்றே சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டதுடன் வர்க்கப் போராட்டமும் ஆரம்பித்துவிட்டது. அன்றிலிருந்து இன்றுவரை வெவ்வேறு வடிவங்களுக்கூடாக தொடர்ந்து கொண்டிருக்கும் இப் போராட்டங்கள் நாமாக விரும்பி வரவழைத்துக் கொண்டவையல்ல. எம்மீது திணிக்கப்பட்டவை. சுரண்டும் கூட்டத்தை அறவே இல்லாமல் செய்யும் வரையும் சுரண்டப்படும் வர்க்கச் சார்பான மனிதாபிமானத்தையே நோக்கமுடியும்.

கிட்லரின் தேசியவாதத்தில் தொடர்ந்த 2ஆம் உலக யுத்தத்தின் பின் ஆயுதம் தூக்குதலே பயங்கரவாதம் என்ற ஒரு (இடைக்கால) நிலைக்கு இட்டுச் சென்ற ஜேர்மானியர்களின் மனோநிலையே இலங்கையில் இதுவரை காலமும் ஏற்பட்ட போராட்ட குழப்ப நிலைகளிலிருந்து சுகனினது முதற் கடிதத்தில் தொனிக்கிறது. புரட்சி பற்றி மாவோ குறிப்பிடுகையில், "புரட்சி என்பது ஒரு மாலை விருந்து அல்ல; அல்லது ஒரு கட்டுரை எழுதுவது அல்ல; ஒரு ஓவியம் தீட்டுவதோ அல்லது தையல் வேலை செய்வதோ அல்ல; அது அவ்வளவு பண்பானதாக இருக்காது; அது அவ்வளவு ஒய்வானதோ, மிருதுவானதாகவோ இருக்காது. அவ்வளவு அமைதியானதாக, இரக்கமுடையதாக, மரியாதையாக இருக்காது; இன்னும் அடக்கமானதாகவோ பெருந்தன்மை வாய்ந்ததாகவோ இருக்காது; புரட்சி என்பது ஒரு கிளர்ச்சி; ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தைத் தூக்கியெறியும் ஒரு பலாத்கார நடவடிக்கை" இரண்டு வர்க்கங்களினதும் (ஒடுக்கும்; ஒடுக்கப்படும்) பகைமைகள் கூர்மையடைந்ததன் விளைவே புரட்சி. இப் பகைமைகளின் போதும் 'பொது மனிதாபிமானம்' பார்ப்பவர்கள் நிச்சயமாக புதுக்காந்தியாகவே ஆகமுடியும்.

எந்தவொரு மனிதனும் உயிருடன் இருக்கையில் தனது வாழ்நாட்களிலே சமுகத்தின் விடிவிற்கு செய்தது என்ன? எவ்வளவு தூரம் அவன் பாடுபட்டான்? என்பதை வைத்துத்தான் அவன் இறந்த பின்பும் அவனை மதிப்பிட முடியும். தவிர, தமிழ்ப் பாரம்பரியப் பெரியார்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் கூறுவது போன்று "ஒரு மனிதன் இருக்கும்வரை பகைவனாக இருந்தாலும் இறந்தபின் மரியாதை செலுத்தவேண்டியது எமது கடமை" என்ற ஒரு முட்டாள்த் தத்துவத்திற்கு மதிப்பளிக்கவோ, செயற்படுத்தவோ முடியாது. இதைத்தான் கருணாநிதியும், ஏனைய

www.tamilarangam.net

இவர்களின் வர்க்க நலன் சார்ந்த வர்களும் செய்கின்றார்கள். போபாலின் படுகொலைக்கும், சீக்கியர்களின் படுகொலைக்கும் இந்து, முஸ்லீம் (ராமர் கோயில்-அயோத்தி) பிரச்சினையைக் கிளறி முஸ்லீம் மக்களின் கொலைக்கும், தாக்குதல் கட்டும் காரணமானவனையும், ஈழத்தைப் பாதுகாப்பதாய் வெளியுலகிற்குக் காட்டி ஆக்கிரமிப்பைச் செய்தவனுமான ராஜீவ் இறப்பிற்கு "மரித்தவர்களைக் குறை கூறுவது மனிதப்பண்பல்ல", இக் கொலையையிட்டு அழு, கண்ணீர் சிந்து என்று கூறினால், தினமும் இவ்வாறான ஆட்சியதிகார வர்க்கத்தினால் அழுகையும், பசியும், பட்டினியும், நோயுமாகவிருக்கும் நிதமும் கண்ணீரிலேயே அழுந்தி சுரப்பியும் காய்ந்த நிலையிலிருக்கும் மக்கள் எவ்வாறு அழுவது? ஏன் அழவேண்டும்?

முற்றிவிட்ட தமது பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் முயற்சியில் ஏகாதிபத்தியநாடுகள் மூலவளமிருந்தும் அவற்றைச் சரியாகக் கையாளும் இயந்திரங்கள் குறைவாகவுள்ள மூன்றாம் உலக நாடுகளில் தேசிய, இன, மத வெறிகளை உண்டுபண்ணி, ஆயுதங்களை விற்று யுத்தங்களையும், கொலைகளையும் தூண்டிவிட்டு அந்நாட்டு மூளைவளத்தை வளரவிடாதும், அந்நாட்டு மக்களின் தலைமுறைகளை பின்நோக்கித் தள்ளி, அந்நாடுகளின் செல்வங்களைத் தாமே அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

"ஏகாதிபத்தியத்தின் இறப்பும் இந்நாட்டு மக்களின் பூரண விடுதலையும்" ஒன்றிலொன்று தங்கியுள்ளன. "முன்னது இன்றிப் பின்னது இல்லை. பின்னது உருப்பெறாது முன்னது இறவாது" என்ற நிலை தவிர்க்கமுடியாத விதியாகவுள்ளது. இந்நிலை ஏற்படும்போதுதான் மூன்றாம் உலகநாடுகளில் மனித இருத்தலிற்கான சாத்தியக்கூறிருக்கும். எனவே ஜனநாயகசக்திகள் இந்நிலைக்காக இடைவிடாது போராடவேண்டும்.

– எஸ்.ரகுபதி

*

*ராஜீவ் கொலை பற்றி கலம் 46இல் நாம் எழுதியதே இப்போதும் எமது கருத்து. தொடர்ந்தும் அதிக பக்கங்களைப் பிடித்துக் கொள்வதாலும், வேறும் புதிய விடயங்களிற்கு இடமளிக்க வேண்டியிருப்பதாலும் "ராஜீவ் கொலையும், தூண்டில் தலையங்கமும்" சம்பந்தமான 'பைலை' இத்துடன் மூடுகிறோம். இவ் விடயத்தைத் தொடர ஜனநாயகம் தராமையை மன்னிப்பீர்களாக!*

*– கடலோடிக*

www.tamilarangam.net



## ஞானச் சுடலை **

அடுத்ததிற்கும்
அடுத்த மாதச் சம்பளத்தில்
இந்த மாதம்
சாப்பிட்டுக்கொண்டிருக்கும்
நமது
பூச்சியக் கனவுகளுக்கு முன்னால்
எப்போது
ஒன்றை எழுதுவது?

நீட்டி நிமிர்ந்தால்
ஒன்றெனக் கொள்க.

அப்போது
கனவுகள் பெறுமானம்.
வாழ்வு பூச்சியம்.

மனசு கனத்த
சோகப் புலங்களோ
நாமோ
ஒரு துளிப் பொழிவுக்காய்
ஏங்கிக் கிடக்க
யார் வீட்டுக் கூரையிலோ
அழுகுக்காய்
தொங்கிக் கிடக்கும்
அந்த
மேகங்கள் பற்றி
என்ன சொல்ல?

*
சிவம்

www.tamilarangam.net

# என்ன இப்படிச் சொல்லிவிட்டீர்கள்?

## புலிகளை மட்டும் எதிர்த்தால் ஈ. பி. ஆகிவிடுவோமா?

புலிகளை மட்டும் எதிர்ப்பதற்கு இந்திய அரசினதும், இலங்கை அரசினதும் வாலைப் பிடித்து "ஜனநாயக நீரோட்டத்தில்" நீந்திக் கொண்டு, தமிழ் மக்களுக்கெதிரான அரசின் யுத்தத்தில் பங்கெடுக்கும் ஏனைய இயக்கங்கள் அல்ல நாங்கள். எம்மீது விதம் விதமான முத்திரைகள் குத்தப்படலாம் என்பதற்காக போராட்டத்திற்கும், மக்களுக்கும் விரோதமான அனைத்துச் சக்திகளினதும் போக்கை எதிர்ப்பதை நாம் கைவிடப் போவதில்லை.

## ஈழ அகதிகளை இந்திய அரசு விரட்டலாமா?

இலங்கையிலிருந்து தமிழ்மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தது மத்திய, மாநில அரசுகளை நம்பியல்ல. இந்திய மக்களை நம்பித்தான். ஒரு நாட்டில் ஒடுக்கு முறைக்குள்ளாகியிருக்கும் மக்களுக்குத்தான், ஏனைய நாடுகளிலும் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் துயர் பற்றி நன்கு புரியும். இந்தப் புரிந்துணர்வை நம்பித்தான் அகதிகள் வேறிடங்களில் தஞ்சமடைகிறார்கள்.

இலங்கையை ஆக்கிரமித்தது இந்திய ஆளும் அதிகார வர்க்கமேயொழிய அப்பாவி இந்திய மக்களல்ல. இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து இந்திய முற்போக்கு, ஜனனாயக சக்திகள் குரல் கொடுத்தது மறக்கப்படலாகாது.

மக்களின் பிரதிநிதிகளாக எந்த

www.tamilarangam.net

அரசும் இல்லாதபோது, அரசின் முடிவுகள் மக்களின் முடிவுகளாகாது. தங்கள் சுய லாபங்களுக்காக தஞ்சமடைந்த அகதிகளைப் பலியாக்கும் இந்திய அரசின் நடவடிக்கைகள் எல்லோராலும் எதிர்க்கப்பட வேண்டும். அகதிகளை துரத்த இந்திய அரசிற்கு எந்த உரிமையுமில்லை.

இந்தியாவுக்குச் சென்ற அகதிகள் வி.ஐ.பி.க்களாக மாட மாளிகையில் தங்கியிருக்கவில்லை. எவ்வித வசதிகளுமற்ற முகாமில் ஒரு நேரச் சாப்பாட்டுடனோ, அதுவுமில்லாமலோ, தங்கள் உழைப்பையும், உடலையும் விற்றுச் சீவிக்கிறார்கள். எவ்வித காரணங்களுமின்றி சிறையிலடைக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். இந்த அவலமான நிலையிலும் இந்தியாவில் அகதிகள் தங்கியிருப்பது விருப்பத்தினால் அல்ல, தமது உயிரைக் காப்பாற்றுவதற்கே. இந்த வாழும் உரிமை இந்திய அரசால் பறிக்கப்படுவதை அனைவரும் எதிர்த்தேயாகவேண்டும்.

## இந்திய எதிர்ப்பு பிரச்சாரமா?

இந்திய எதிர்ப்புப் பிரச்சாரமும், இந்திய ஆளும் அதிகார வர்க்கங்களை எதிர்த்தலும் ஒன்றல்ல. நாம் பின்னதைத்தான் செய்கிறோம்.

இந்திய மக்களை ஒடுக்கியும், அயல் நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்தும், அயல்நாடுகளின் விடுதலைப் போராட்டங்களைச் சிதைத்தும் தனது நாட்டாண்மையை நிலை நாட்ட முனைந்துகொண்டிருக்கும் அதேவேளை இம் முனைப்பினால் சொந்த நாட்டையும், அயல் நாடுகளையும் பலவீனமாக்கி ஏகாதிபத்தியங்கள் தென்னாசியப் பிராந்தியத்தில் கால் பதிப்பதற்கு வழிசெய்தும் கொடுக்கிறது இந்திய ஆளும் வர்க்கம். ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் தமது பலத்தைப் பெருக்க ஒன்றிணையும் அதே நேரத்தில் , அவற்றின் சுரண்டலையும், ஆக்கிரமிப்பையும் முறியடிக்க தென்னாசியப் பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து பலமாக முடியாமல் அவற்றைப் பகை நாடுகளாக்குகிறது இந்திய ஆளும் கும்பல். இக் கும்பலை எதிர்ப்பதென்பது இந்திய மக்களை எதிர்ப்பதென்று அர்த்தமாகாது. எமது விடுதலைப் போராட்டம் இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தமுடையதே. எனவே இந்திய ஆளும், அதிகார வர்க்கத்தை எதிர்க்க வேண்டியது இன்னும் முக்கியத்துவமடைகிறது.

அதுசரி, புலிகள் எப்போது இந்திய ஆளும் வர்க்கத்தை எதிர்த்தார்கள்? தங்களை அங்கீகரிக்கும் பட்சத்தில் இந்திய ஆளும் வர்க்கத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவே புலிகள் அறிக்கைகள் விட்

www.tamilarangam.net

டுள்ளனர். சீக்கிய தீவிரவாதிகள் மீதான தாக்குதலின்போது இந்திய இராணுவத்துடன் இணைந்து தாங் களும் சீக்கிய மக்களைக் கொன்ற தாக இந்தியச் சிறையிலிருக்கும் புலி உறுப்பினர் ஒருவர் விவசாயி கள் விடுதலை முன்னனித் தோழர் களிடம் கூறியுள்ளார். இலங்கையில் வடக்கு-கிழக்கில் தங்கள் கொட் டத்தை யாரும் இடையூறு செய்யா விடில் அப்பால் இந்தியப் பிராந் திய ஆதிக்க சக்தியாயிருந்தா லென்ன, அமெரிக்க ஏகாதிபத்திய மாயிருந்தாலென்ன புலிகளுக்கு கவலையில்லை. .

## ராஜீவ் கொல்லப்பட்டபின்தான் மேற்குநாட்டு முதலாளித்துவங் களும், ஏகாதிபத்தியங்களும் இந்தியாவுக்குள் புகுந்தனவா?

முதன் முதலில் சர்வதேச நாணய நிதியத்திடம் நிபந்தனையுடன் கடன் வாங்குவதை ஆரம்பித்தவரே இந்திரா காந்திதான். 1981இல் கடுமையான நிபந்தனைகளை ஏற் றுக்கொண்டு 5 ஆயிரம் கோடி ரூபாய்கள் கடனாக வாங்கினார். இந்தக் கடன் வாங்கப்படும்போதே இந்தியாவின் அந்நியக் கடன் 20 ஆயிரம் கோடி ரூபாவாக இருந் தது. பெற்றுக்கொண்ட கடன்களின் அடிப்படையில் "பசுமைப் புரட்சி" என்ற திட்டத்தை அமுல்படுத்துவ தாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா விலிருந்து நோய் தாக்கும் விதை களை இறக்குமதி செய்து கிராமங் கள் வரை அமெரிக்க ஏகாதிபத்தி யம் ஊடுருவ வழி போட்டுக் கொடு த்தார் இந்திரா. ச.நா.நிதியத்தின் நிபந்தனைகளின்படி பொருளாதா ரக் கட்டமைப்பில் பெரும் மாற்றங் களைச் செய்து ஏற்றுமதி அடிப்ப டையிலான உற்பத்திக்கு முன்னுரி மையளிக்கும் திட்டங்களையே அமுல்படுத்தினார். நிதியத்தின் நிபந்தனைகளின்படி இறக்குமதி மீதான தடைகள் தளர்த்தப்பட்டன. அந்நிய முலதனமும், தொழில்நுட் பமும் கட்டுக்கடங்காமல் பெருகின. கடன்படுவதற்கு முன் "இந்தியனாக இரு, இந்தியப் பொருளையே வாங்கு" என்று அறிவுறுத்திய அரசு பின் அந்நியத் தயாரிப்புகளு க்கே முழு ஊக்குவிப்புக் கொடுத் தது.

இந்திராவைத் தொடர்ந்து ஆட்சி க்கு வந்த ராஜீவும் தாயின் வழியி லேயே ச.நா.நிதியத்தின் நிபந்த னைகளை முழுமுச்சாக நிறைவேற் றினார். இதுவரை இல்லாத அள வுக்கு தனது புதிய பொருளாதாரக் கொள்கைகள் முலம் இந்தியப் பொருளாதாரத்தை ஏகாதிபத்தியங் களிற்குத் திறந்துவிட்டார். கட்டுப் பாடுகள், தடைகள், லைசென்ஸ்கள் எதுவுமேயில்லாமல் ஏகாதிபத்தி யங்கள் ஒரு நாட்டில் தங்குதடை யின்றி புகுந்து கொள்ளையடிப்பத ற்கு வழி செய்வதுதான் தாராளமய மாக்கல் கொள்கை. இந்திரா கால

www.tamilarangam.net

த்திலிருந்தே அமுல்படுத்தப்பட்டு ராஜீவால் தீவிரப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கல் கொள்கைதான் இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கும், ஏகாதிபத்தியங்கள் தாராளமாகக் கடை திறப்பதற்கும் காரணம்.

ராஜீவின் ஆட்சியில்தான் 100% வெளிநாட்டுத் தயாரிப்புகள் என்று கூறுவது பெருமையாகக் கருதப்பட்டது. அந்நிய நாடுகளிலிருந்து மூலதனம், தொழில்நுட்பம், உதிரிப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டது மட்டுமல்ல, ச.நா.நிதியத்தின் நிபந்தனைகளின்படி பெரும்பாலான உரத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு உரம் இறக்குமதி செய்யும் இரண்டாவது நாடாகவே இந்தியா மாறிவிட்டது.

இதைவிட ஜேர்மனி, சுவிஸ், அமெரிக்கா போன்ற நாடுகளின் இரசாயன தொழிற்சாலைகள் பல வருடங்களுக்கு முன்பே இந்தியாவுக்குள் திறக்கப்பட்டுவிட்டன.

இந்திரா காங்கிரஸின் பழைய தலைமைகளான இந்திரா, ராஜீவ் அமைத்துக் கொடுத்த பாதையில் தான் இன்றைய ஆட்சியாளர்களும் போய் இந்தியாவை விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

## *ஸ்ரீறிமா காலத்தில் இந்தியா இலங்கையில் தலையிடவில்லையா?*

இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இந்திய அரசு இலங்கையில் எப்போதோ கால் பதித்துவிட்டது.

1971ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்க இந்திய அரசு இராணுவ, இராணுவத் தளபாட உதவிகளைத் தாராளமாக வழங்கியிருந்தது. இதுபோன்ற கிளர்ச்சிகளை அடக்க எந்த உதவி என்றாலும் தயங்காமல் கேட்கும்படியும், தாராளமாக உதவி வழங்குவோம் என்றும் அன்றைய இந்தியப் பிரதம மந்திரி இந்திராகாந்தி அன்றைய இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீமாவுக்கு உறுதியளித்திருந்தார். இன்றுபோல் அல்லாது அன்று தனியே அணிவகுப்பு வரவேற்புப் படையாக அரசபடைகள் இருந்த நிலையில் இந்திய அரசின் உதவியுடன்தான் பத்தாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் ஸ்ரீமாவோவால் கொன்றுகுவிக்கப்பட்டார்கள் என்பதை சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் மறக்க மாட்டார்கள்.

பொருளாதார ரீதியாகவும் இந்தியா எப்போதோ குறிப்பாக ஸ்ரீமாவோ காலத்தில் தீவிரமாக கைவைத்துவிட்டது. இன்றுவரை இலங்கையின் உல்லாசப் பிரயாணத்துறை சார்ந்தவற்றில் முதலிட்டு வருவாய் தேடிக்கொண்டிருப்பவர்கள் இந்தியப் பண முதலைகள்தான்.

www.tamilarangam.net

மலையகத்தில் உழைத்துச் செத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு குடியுரிமை பறிக்கப்பட்டபோது தான் (இந்திய மக்களுக்கு மலை நாடு வாழவைக்கும் தோட்டக் காடா? எப்போது அவர்களை வாழ வைத்தது? எப்போதிலிருந்து மலையக மக்கள் இந்திய மக்களாக மாறினார்கள்? வின்சன்ட் எங்கே வாழ்கிறீர்கள்?) இந்திய பண முதலீட்டாளர்களுக்கு எந்தவித தடைகளுமின்றி ஸ்ரீமாவோவால் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

இந்திராகாந்திதான் கச்சதீவை இலங்கைக்குப் பிச்சை போட்டு விட்டு பாக்குநீரிணையில் குறிப்பிட்ட எல்லைக்கப்பால் இலங்கை மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் தடைசெய்து பெரும் கடற்பரப்பைக் கொள்ளையடித்தவர்.

<u>எங்கள் நாட்டுக் கலை,கலாச்சாரங்கள் இந்தியாவுடன் இணைந்திருப்பது நட்டமில்லையா?</u>

ஆபாச, சீரழிவு, வக்கிர கலை, கலாச்சாரங்களை சொந்தமாகத் தயாரித்தும், இறக்குமதி செய்தும் இந்தியாவில் உண்மையான மக்கள் கலை, கலாச்சாரங்களைச் சிதைத்து வருகின்ற இந்தியாவுடன் இலங்கையின் கலை, கலாச்சாரங்கள் பிணைய முடியுமா? என்பதும், இதன் பாதிப்புகள் எவை என்பதும் எவ்வளவு பிரதானமான கேள்விகள்.

இந்தியப் பாராளுமன்ற அரசியலுக்கே பக்கபலமாக இருக்கும் கழிசடைச் சினிமாக்களும், மக்களைப் போதையில் வைத்திருக்கும் குமுதம், இதயம், திரைச்சித்திராக்களும்தான் கலை, கலாச்சாரங்கள் என்ற பெயரில் இலங்கைக்குள் திணிக்கப்படுகின்றன. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவை இரண்டிலிருந்து இன்றைய மேடை நிகழ்ச்சிகள்வரை எத்தகைய கலாச்சாரம், கலை கொடிகட்டிப் பறக்கிறது என்பதிலிருந்து யாருக்கு லாபம், யாருக்கு நட்டம் என்று பார்த்துக்கொள்ளலாம்.

மக்கள் கலைகள் இன, மொழி எல்லைகள் கடந்தவை. இவற்றுக்கு இன்று என்ன நடந்தது என்று பார்க்கவேண்டிய தேவையிலேயே நாம் இருக்கின்றோமே தவிர "இந்தியக் கலை,கலாச்சாரங்களுடன்" பிணைத்து இலாபமடைவதில்லை.

<u>மதங்கள்</u>

கத்தோலிக்க பீடங்கள் மட்டுமல்ல, எல்லா மதங்களும்தான் அதிகார வர்க்கங்களுக்கு ஆதரவாக இருக்கின்றன. தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களைக் கொன்று குவிக்கும் அரச கொலைப்படைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டியும், அவர்களின் பணி செவ்வனே தொடர வேண்டியும் சர்வ மதங்களினதும்

www.tamilarangam.net

உயர் பீடங்கள் இன்றுவரை சர்வ மதப் பிரார்த்தனை செய்துகொண்டுதானிருக்கின்றன. ஆசி வழங்கிக் கொண்டிருக்கின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் தாம் பிடித்த அமெரிக்க தம்பதிகளை இந்திராகாந்தியும், எம்.ஜி.ஆரும் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே விடுதலை செய்ததாகக் கூறி, குறிப்பிட்ட இடத்திலல்லாமல் (தமது பாதுகாப்புக் கருதி) திடீரென தியோகுப்பிள்ளையிடம் ஒப்படைத்தார்கள்.

## *சர்வதேச மன்னிப்புச்சபை, புதிய ஜனநாயகம், தென்னாசிய நிறுவனம்*

சர்வதேச மன்னிப்புச்சபையின் 1991ஆம் ஆண்டு அறிக்கையில் அரச பயங்கரவாதம் பற்றிய விபரங்களுடன் புலியின் அராஜகங்கள் பற்றி மட்டுமல்ல, முஸ்லீம் ஊர்க் காவற்படையின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. இதன் தமிழாக்கம் "சரிநிகர்" இதழ் 12இல் வெளியாகியுள்ளது.

புதிய ஜனநாயகம் பாதிரிமாருடன் தொடர்பு வைத்திருக்கிறது என்று புதிய ஜனநாயகத்துடன் வன்மையாக கருத்தால் முட்டி மோதிக் கொண்டிருக்கும் கேடயமே இதுவரை எழுதவில்லை. இந்திய அதிகார வர்க்கத்தால் அச்சகங்கள் மறுக்கப்பட்ட நிலையில் சஞ்சிகையை கிரமமாக வெளியிடமுடியாமல் தனது வாசகர்களிடம்தான் தோழமையான உதவிகளைக் கோரும் புதிய ஜனநாயகத்திற்கு பாதிரிமாருடன் தொடர்புகள் இருக்குமாயின் இப்படியான நெருக்கடியில் அவதிப்படவேண்டிய கட்டாயமில்லை.

தென்னாசிய நிறுவனத்திற்கான ஒரு பகுதி நிதியைக் கொடுக்கும் உதவிநிறுவனம் மதம் சார்ந்தது தான். போட்டோக் கொப்பிக்கான நிதியின் ஒரு பகுதி தென்னாசிய நிறுவனத்திடமிருந்து இச் சஞ்சிகைக்குக் கிடைக்கிறது. இது குறித்தான சுயவிமர்சனத்தை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

இக் குறிப்புகளில் சுருக்கமாகக் குறிப்பிட்டவற்றை பிறிதொரு சந்தர்ப்பத்தில் தனி ஆக்கங்களாகத் தருகிறோம்.

– கடலோடிகள்

---

*இடையில் தடைப்பட்டுப் போன தொடர் ஆக்கங்களை அடுத்த கலங்கள் கொண்டுவரும்.*

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# மனம் தேடும் முகம்

இவனுக்கு இனித் தாங்காது என்று தோன்றியது காதையும், நெஞ்சையும் பிளக்கும் இந்த இசை. பளிச்சிட்டு, பளிச்சிட்டு மாறி மாறி வரும் ஒளி. தன்னை முற்றிலும் அந்நியமாக உணர்ந்தான்.

வேண்டுமென்றே கிழிக்கப்பட்டு ஒட்டுப்போடப்பட்ட உடைகளும், கலர் கலராக தெரிந்த தலைமுடிகளும், இடையிடையே மௌனமாக உட்கார்ந்திருக்கும் நாய்களும்... இவ்வளவு சத்தத்திற்குள்ளும், சிகரெட் புகை மண்டலத்திலும், மூச்சுக் காற்று முட்டும் நெரிசலிலும் தன்னைத் தனிமையாக உணர்ந்தான்.

ஊரில் இருந்து கொண்டு வந்த டீசன்டான குழாய்ச்சட்டையும், வெளிர் நிற சேட்டும்தான் தன்னை அக் கூட்டத்திலிருந்து அந்நியமாக்குதோ என்று யோசித்தான்.

தான் இங்கு வந்த நாலு மாதங்களில் தன்னிடம் எதுவித மாற்றமும் இல்லை என்று யோசிக்கையில் ஒரு கையில் புகைந்த சிகரெட் அப்படி இல்லை என்றது. மறு கையில் இருந்த பியர் நுரைத்து மறுத்தது.

அவனது தனிமைக்கு இந்த இரண்டும் தான் மௌனசாட்சிகள். ஒவ்வொரு சிகரெட் புகைக்கும் போதும், தனக்கு கவலைகளே இல்லை என்று தன்னை ஏமாற்றும் அளவுக்கு குடிக்கும் போதும் அவனது கையாலாகத்தனம் மனதில் குத்தும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியில் வந்தான். இரவு வெகு நேரமாகியும் இன்னும் இருட்டவுமில்லை. குளிரவுமில்லை. புண்பட்ட மனதைப் புகை விட்டு ஆற்ற உதவும் சாதனம் உயிரை விட்டிருந்தது.

புல்வெளியில் மல்லாந்து படுத்து கண்ணை மூட அம்மா வந்தாள்.

"அப்பன் நீ வெளியால போடி. உவங்கள் உன்னை இங்க இருக்க விடமாட்டாங்கள். நீ எங்களுக்கு உழைக்க வேண்டாம். உயிரோட இருந்தாலே காணுமப்பு"

அப்பாவின் கடைவாயில் நெளிந்த கேலிச் சிரிப்பு ஞாபகம் வந்தது. எனக்கு முதலே தெரியும் இப்படி வரும் என்பதுபோல அவரது ஒழுங்குகளும், ஏற்பாடுகளும் இருந்தன.

இவனும் களைச்சுத்தான் போனான். ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு இடம். சக தோழர்களே அவனை வேட்டையாடத் துரத்திய போது அவன் அவர்களுக்காகப் பரிதாபப்பட்டான். ஆனால் என்றுமே பதவிக்காகக் குறுக்கே பாயும் குண்டுகளில் மடிய அவன் தயாராக இல்லை. பதவிகளும், தலைமைகளும் விலை போனபோது அதை எதிர்ப்பதில் அவனுக்கு தயக்கம் இருக்கவில்லை.

தன்னை இரவுகளில் தங்க வைத்தற்காக பச்சை மட்டையினால் அடி வாங்கிய நண்பர்களை நினைக்கையில் தாடைகள் இறுகின. அவர்களை விட்டு விட்டு தான் மட்டும் இங்கே வந்தது சரியா, தவறா என்ற கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

இவனுக்கு இந்த வாழ்க்கையும் பிடிபடவில்லை. மொழி இன்னமும் ஒரு பூதாகரமான பிரச்சினை. இங்கே ஓடிக்கொண்டிருக்கும் இவனது வயதொத்தவர்களது மனோபாவம் இவனைத் திகைக்க வைத்தது. புதிய நடைமுறையில் தன்னைப் பொருத்திக்கொள்வதிலான சிரமங்களைக் கேலி பண்ணுவதிலேயே அவர்களது மனோபாவம் இருந்தது. இன்றைய காலகட்டத்தில் நாட்டில் வாழும் இளைஞர்களது மனோபாவத்திற்கு வளர இவர்களுக்கு இன்னும் காலம் எடுக்கும் என்று யோசித்தான்.

நல்லகாலம். இவனை இந்த இடத்திற்கு இழுத்து வந்தவனுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தது. அவனைச் சார்ந்தவர்களும் இவனுடன் ஆங்கிலத்திலேயே உறவாடினர்.

ஆனாலும் அவர்களுக்கு இடையிலான உறவை இவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இசை பிடித்திருந்தால் பிடித்தவர்கள் தன் பாட்டில் ஆடினர். மற்றவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலத்தினர். எதையும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கினுள் செய்ய விருப்பப்படாதவர்கள் என்று முடிவு செய்தான்.

"ஏய்"

குரல் கேட்டு கண்களை மூடியிருந்த கையை எடுத்தான். அவனது நண்பனின் நண்பி. என்னவோ தொடர்ந்து டொச்சில் கேட்க தனக்கு டொச் தெரியாது என்று ஆங்கிலத்தில் கூறி மீண்டும் கண்களை மூடினான். அவள் இவனுக்குப் பக்கமாக அமர்வதை உணர்ந்தான். சிறிது சங்கடமாக இருந்தது இவனுக்கு. தனிமை பறி போனது போல உணர்ந்தான்.

இப்போது அவள் ஆங்கிலத்தில் ஆரம்பித்தாள். "ஏன் இடையில் வந்தாய்?" அதில் அறியும் ஆர்வம் இருந்தது.

"எனக்குப் பிடிக்கவில்லை"

"எது இசையா அல்லது.... " என்று இழுத்தாள். விடமாட்டாள் போலிருந்தது.

இப்போதைக்கு உன்னையும் சேர்த்து என்று சொல்ல வந்தவன் மாற்றி "சத்தம் காதைப் பிய்க்குது" என்றான்.

சற்று நேரம் பொறுத்தவள் "அப்படியென்றால் உங்கள் நாட்டில் இப்படி எதுவும் இல்லையே? எப்படி நீங்கள் உங்களது சமூகத்துடன் தொடர்புகொள்ளுகிறீர்கள்?" கேட்டு நிதானித்தாள்.

இவனுக்குச் சிரிப்பு வந்தது. நினைவு தெரிந்த நாளில் இருந்து இவனது ஊர் வாசிகசாலையும், அதனருகான சந்தியும் தலைமுறை தலைமுறையாக கைமாறிக்கொண்டு வருகின்றது. ஒரு தேர்தலின்போது கள்ளவோட் போடுவதற்காக முன்பே வோட் போட்டவர்களின் மையை சுண்ணாம்பு, தேசிக்காய் என்று முயன்றதன் மூலம் சந்திக்குப் புதிய அங்கத்தவனான். அடுத்த தேர்தலில் முன்பு வோட் போட்டவர்கள் கலியாணம், குடும்பம், சிகரெட், தண்ணி... என்று விலகியிருக்க இவனும் இவனது மட்டமுமே சந்தியின் புதிய பொறுப்பாளிகள்.

வாசிகசாலைத் தலைவர் கலியாணம் முடித்தபோது அவர் சீதனம் வாங்கிக் கலியாணம் செய்ததால் வாசிகசாலை சார்பில் வரவேற்பு தேவையில்லை என்று கதைத்துச் சாயம் பூசப்பட்டிருந்தாலும், வாசிகசாலை கூட இவர்கள் பொறுப்பில்தான். அதில் பாலர் பாடசாலை, இலவச ரியூசன், விளையாட்டு என்று ஒழுங்குபடுத்துகையில் நாட்டின் புதிய அலையில் கவரப்பட்டு கிராமம் மாறி நாடு என்

www.tamilarangam.net



நானபோது இன்னும் ஆழமாக மாறிப் போனான்.

"ஏய்" மறுபடி கலைத்தாள்.

"என்ன நித்திரையோ?" செல்லமாக முதுகில் குத்துமளவிற்கு வந்திருந்தாள்.

"என்ன கேட்டாய்?"

"சரியாய்ப் போச்சு" பொய்யாகச் சலித்துக்கொண்டு மீண்டும் கேட்டாள்.

அங்கு இவன் என்ன செய்தானோ இங்கு எதுவும் இல்லை. ட்ராமில் ஏறினால் ஏதோ ஒன்று தங்களுடன் பிரயாணம் செய்வதாக அவர்கள் யோசிப்பதாக இவன் யோசிப்பான். சிலவேளை தனது நிறம் காரணமோ என்றால் அதுவும் இல்லைப் போல இருந்தது. சிலவேளை இடமிருந்தால் அவன் பக்கத்தில் ஆட்கள் இருப்பார்கள். இடமிருந்து அவன் இருந்தாலும் இதுவரை ஆட்சேபணை இல்லை. யோசித்து யோசித்து அவன் எடுத்த முடிவு அவனுக்கென்று ஒரு முகமும் இல்லை.

இவனிடமிருந்து இதுவரை பதில்லாததால் அவள் மீண்டும் அவனது தலைமயிர் கலைத்தாள். அவனது இலேசான சுருள்முடி எப்படிக் கலைத்தபோதும் மீண்டும் அதே நிலைக்கு வருவதை வியப்பாக அவள் பார்த்து மீண்டும் மீண்டும் முயலுகையில் இவன் சொன்னான் " இல்லை. எனது முகம்

www.tamilarangam.net

எங்கே என்று யோசித்துப் பார்த்தேன்"

தலைமயிரை அளைவது சகஜமாக நின்றது. இவனது குரலில் கேலி இருந்ததா என்று அவள் யோசிப்பது போலிருந்தது. என்ன சொல்லுகிறான் இவன்? அவள் சற்றே குழம்பினாள் போல நெற்றியைச் சுருக்கி தலையைச் சொறிந்தவள் அவனது பியர்ப் போத்தலை விசமமாக பார்த்தாள். இது எத்தனையாவது என்பது போல.

"முதலாவதில் அரைவாசிகூட முடியவில்லை"

அவள் இன்னமும் புதிராகப் பார்த்தாள். முகத்தில் இவனைப் புரிந்துகொள்ளும் ஆர்வம். கண்களைச் சுருக்கி, புருவத்தை மேலுயர்த்தினாள் சொல் என்பது போல.

"எங்கள் ஊரில் எந்தப் பொதுக் காரியம் நடந்தாலும் எனது பங்கில்லாமல் இல்லை. ஊரின் ஒவ்வொரு அடியிலும் எனது காலடியும் இருக்கும். இங்க அப்பிடி இல்லை. வெறும் றாத்தவுஸ், பாங்க், காசு என்ற சின்ன வட்டத்துடன் எல்லாம் சரி. நாட்டிலை இன்னமும் பிரச்சினை இருக்குது. அதிலை நான் செய்ய வேண்டியதும் இருக்கு"

இங்க ஓடி வந்தது நானாகவா என்று குறுக்காக மின்னல் ஓடிற்று. நாங்கள் துரத்தப்பட்டவர்கள். கொஞ்சம் ஆழமாக சொல்லப் புறப்பட்டு ஆங்கிலம் வேறு அவனைத் திணறடித்தது. இடைநாட்களில் ஓடிய அனுபவம் மனதில் தோன்றி அலைக்கழித்தது. கண்கள் சிறிது சிவப்பேறிப் போயின.

விலுக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தான். பியரின் இரண்டு மிடறுகள் போத்தலைக் காலியாக்கியது. அவசரமாகச் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்தான்.

சிகரெட் முடியும்வரை அவள் காவலிருந்தாள். விரல் சுடுமட்டும் புகைத்ததனால் அவனுக்கோ அந்த சிகரெட் மணம் ஒரு மாதிரியிருந்தது.

"தேவையான சாப்பாடும், இருக்க இடமும், உடுக்க உடையும் மட்டும் மனதை நிறைக்காது பெண்ணே" அவன் பழையபடி சகஜநிலைக்கு வந்திருந்தான்.

"இங்க நான் இருப்பதில் அல்லது எனக்கான தேவைகளில் எனது ஆத்மாவின் பங்கு எதுவுமேயில்லை. இதுதான் எனது பிரச்சினை. இந்தக் குறிப்பிட்ட நபர் நானாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. எக்ஸ் ஆயும் இருக்கலாம். வை ஆயும் இருக்கலாம். இதில் நான் எங்கே? நான் எங்கே?"

www.tamilarangam.net

சொல்லி முடிக்கும்போது கண்கள் கலங்க, குரலும், முகமும் மாறிவிட்டிருந்தன. அவன் இன்னமும் நெருக்கமாக வந்து ஆதுரமாகப் பார்த்தான்.

"வீட்டுக்குப் போவோமா?" அழைப்பில் ஒரு அந்நியோன்னியம் இருந்தது. புரிந்துகொண்ட ஆதரவு இருந்தது. கலங்கிய கண்களுடன் நிமிர்ந்து பார்த்தவனுக்கு கண்களின் முன்னே பூச்சி பறப்பது போலிருந்தது. தலையால் மறுத்தபடி சுவாதீனமாக அவனது மடியில் மடிந்தான். அவன் ஆதுரத்துடன் அவனது தலையைக் கோதிவிட்டபோது அவனுக்கு அம்மா ஞாபகம் வந்தது. சூடான கண்ணீர் கன்னங்களில் உருண்டோடிற்று.

* பாலா *

---

பின்னட்டை அறிவித்தல்:

திருகோணமலையில் இயங்கும் 'தாகம்' வெளியீடாக வந்த இப்னு அலமத்தின் கவிதைத் தொகுப்பில் 'தாகம்' கலை, இலக்கியக்குழு எழுதிய முன்னுரையிலிருந்து.

---


# தூண்டில்

டிசம்பர் 1991

கலம்: 48

ஆசிரியர் குழு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
Germany

தொலைபேசி: (0231) 136633
<புதன்கிழமைகளில்
14-20 மணிவரை>

\- - - - - - - - - - - - - - - - -

சந்தா

| | | | |
|---|---|---|---|
| ஜேர்மனி | : 6 மாதங்கள் | = | 20,- D.M |
| | 1 வருடம் | = | 38,- D.M |
| ஐரோப்பா | : 6 மாதங்கள் | = | 25,- D.M |
| | 1 வருடம் | = | 48,- D.M |
| அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா | : 1 வருடம் | = | 65,- D.M |
| அவுஸ்ரேலியா | : 1 வருடம் | = | 75,- D.M |

நடைமுறைக்கணக்கு இல: 308 074 68
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

\- - - - - - - - - - - - - - - - -

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவியில் ஒன்றாக உங்கள் சந்தாநிதியை அனுப்பிவைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.

\- - - - - - - - - - - - - - - - -

உங்கள் கருத்துகள், விமர்சனங்களுடன் எங்களுடையதும், உங்களுடையதுமான முயற்சிகளைப் பயனுள்ளதாக்குவோம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

எங்கள்
இருப்பை மட்டுமல்ல
எங்கள் படைப்புகளையும்
இவர்கள்
எரித்துவிடலாம் - ஆனால்
அழித்துவிட முடியாது.
எங்கள்
"சுயம்" என்றும் எங்களோடுதான்.
நிச்சயம்
தொடர்வோம்
கீறல்களோடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்